Registered No. M. 594

ஸத்யம்வத,
தர்மஞ்சர.

தத்வம் எங்குண்டு,
தத்வன் அங்குண்டு.
(திருமந்திரம்.)

பிரம்மஞ்ஞானம் ॐ பத்திரிகை

வாலம் 11. { 1907-ஞு சூலை, ஆகஸ்டு & செப்டம்பர் / பிலவங்கஞு ஆடி, ஆவணி & புரட்டாசி } நம்பர். 1, 2 & 3

அடக்கம்.

1. பகவத்கீதை, எ. சிவராவ் பி எ. ... ... 47—5

2. தியாஸபி, (தொடர்ச்சி) V. R. ... ... 13.

(b) பிர்ம்மஞ்ஞான விளக்கம், வேங்குசாமிய்யர். ... 14—2

(a) நன்மை, தீமை by (அபேதாநந்தர்) ... ... 1—

3. (b) யோகம் (தொடர்ச்சி) C. நாராயணஸாமி அய்யர்... 5—

(c) புலியும், ஒருவனஸஞ்சாரியும். ... ... 10—

4. (a) ஹிந்துமததத்துவங்கள். ... ... 12—

(b) வெள்ளையானைக்கு பாபவிமோசனம். ... ... 14—1

5. (a) பிராதஸ்நாநவிதி. ... ... 17—1

(b) ஸ்ரீ கண்ணபிரானும், பிராம்மணபத்நிகளும். ... 19—

(c) தீபாவளி. ... ... 22—23.

6. (a) சிவபரத்துவம், ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை ... 23—25

(b) கர்னல் ஹென்ரீஸ் டீல் ஆல்காட் ... ... 25—2

(c) பிரச்னோத்திரங்கள் ... ... 29—

7. நமது பத்திரிகை, சமாசாரக்குறிப்புகள், பிரசுரங்கள் 31—4

Printed at the "Sri Vidya Vinodini Press," Tanjore
Edited and Published by A. Ramier at Tiruvalur.

Copy-Right Registered.

வருடசந்தா மிகவும் சொற்பம்! து...

பகவத்கீதை.

𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑍋 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍇𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌪𑌤𑍇।
𑌸𑍌𑌭𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃 𑌶𑌂𑌖𑌾𑌨𑍍𑌦𑌧𑍍𑌮𑍁𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍
𑌪𑍃𑌥𑌕𑍍 ॥ கஅ ॥

𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌪𑌤𑍇 = (𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌃 𑌪𑌤𑍇) அரசனே,

𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑌃 𑌚 = துருபத ராஜாவும்,

𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍇𑌯𑌾𑌃 𑌚 = துரௌபதீ புத்திரர்களும்,

𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃 = பெரிய கையையுடைய,

𑌸𑍌𑌭𑌦𑍍𑌰𑌃 𑌚 = சுபத்திரை புத்திரனும்,

𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 = நான்கு பக்கங்களிலிருந்தும்,

𑌶𑌂𑌖𑌾𑌨𑍍 = சங்கங்களை; 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌪𑍃𑌥𑌕𑍍 = தனித்தனியே

𑌦𑌧𑍍𑌮𑍁𑌃 = ஊதினார்கள்.

தாற்பரியம்.

அப்படியே, பிருதிவிபதியே, திருதராஷ்டரனே, துருபத ராஜா, துரௌபதி புத்திரன், சுபத்திரையுடைய மகா பராக்கிரமியான புத்திரன் (அபிமன்யு) இவர்களும் அங்குமிங்கும் தங்கள் தங்களுடைய சங்குகளை ஊதினார்கள்.

(ஆநந்தகிரி)

𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 முதலிய நான்கு விசேஷணங்களையும் தனித் தனியே அறியவேண்டும்.

(𑌭𑌾𑌷𑍍𑌯𑍋𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑌦𑍀𑌪𑌿𑌕𑌾)

𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌪𑌤𑍇:—

பிருதிவிபோல் துக்கத்தை சகிக்க யோக்கியனாயிருக்கிறாய் என்பதை இந்த பதத்தால் சூசிப்பிக்கிறான்.

(மதுஸூதனர்)

திருதராஷ்டரனே, ஸ்திரமாயிருந்துகொண்டு அதாவ சஞ்சலப்படாமல் கேள்.

ஸ ஃகோஷோ தார்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயானி வ்யதாரயத் |

நபஶ்ச ப்ருதிவீஞ்சைவ துமுலோ வ்யனுநாதயன் || 19 ||

ஸ:=அந்த, துமுல:=பெரிதான, கோஷ:=சப்தமானது, நபஶ்ச=ஆகாசத்தையும், ப்ருதிவீஞ்சைவ=பூமியையும்கூட, வ்யனுநாதயன்=சப்திக்கும்படிசெய்து, சப்தத்தால் பூரித்து, தார்தராஷ்ட்ராணாம் = திருதராஷ்டிரனைச்சேர்ந்தபுத்திரர்கள் சேனைகள் இவர்களின், ஹ்ருதயானி=அந்தக்கரணங்களை, வ்யதாரயத்=பேதித்தது.

தாற்பரியம்.

இந்த வீரர்களின் சங்கநாதம் ஒன்ருகச் சேர்ந்து பெரிதாகி எங்கும் பரவி, அதினல் ஆகாசம் பூமி நிறைந்துவிட்டன. திருதராஷ்டரனுடைய பிள்ளைகளினுடையவும் சேனைகளுடையவும் ஹிருதயங்களும் பேதித்துப்போய்விட்டன.

(ஆநந்தகிரி)

1. துமுல: =அதிபயங்கரமான

2. வ்யதாரயத் :—

பாண்டவர்களின் சங்கநாதத்தைக் கேட்டு மூன்று லோகங்களும் பிரதித்துவனிக் கொடுக்கும்போது, அதைக்கேட்கும் கௌரவர்களின் ஹிருதயங்கள் அந்த நாதத்தால் பேதிக்கப்பட்டன என்று சொல்லுவது யுக்தமே.

(ஸ்ரீதரர்)

அவதாரிகை:—

பாண்டவ சங்கநாதம் உன்னுடைய மனுஷியாளுக்கு மகாபயத்தை உண்டுபண்ணிற்று என்று சொல்லுகிருன்.

வ்யனுநாதயன் = பிரதிதுவனியால் பூரித்து.

(மதுசூதனர்)

வ்யாக்யானம் :—

முன் கௌரவ சைன்னியத்தில் சங்குகள் வாத்தியங்கள் இவைகளின் மகாசப்தம் உண்டானபோது பாண்டவர்களுக்கு சுத்தமாய் பயம் தோன்றவில்லை. கலக்கம் உண்டாகவில்லை. ஆனால் பாண்டவர்களின் சங்கநாதத்தைக் கேட்டு கௌரவர்களெல்லாரும் பயமடைந்தார்கள். இப்படிச் சொன்னதின் கருத்து:— பாண்டவபக்ஷம் நியாயமானதால் அவர்களிடத்தில் மகாவீரபராக்கிரமிகளிருந்தார்கள் என்பது திருதராஷ்டரனுக்குத் தெரிவிக்கவேண்டியதென்பதாம்.

திருதராஷ்டரனுடைய பக்கத்திலிருக்கிற பீஷ்மர், துரோணர் முதலான யோத்தாக்களுடைய ஹிருதயங்களைக்கூட பாண்டவசங்கநாதம் பிளக்கிறதுபோல் துக்ககரமாயிற்று. ஏனெனின் அந்த நாதம் மிகவும் தீக்ஷணமாயிருந்து பிரதி துவனி பலத்தால் ஆகாசம், பூமி இவைகளை சப்திக்கும்படிச் செய்தது. பிரதிதொனி எங்கும் நிறைந்தது என்பது கருத்து.

(பாஷ்யோத்கர்ஷ தீபிகா)

சப்தம் துக்கத்தை உண்டுபண்ணினதாகச் சொன்னது யுக்தமே. ஏனெனின் அது பிரதிதுவனியால் ஆகாசம் பூமி இவைகளைப் பூரித்துவிட்டது.

ஆர்ச்சுனனுக்கு வைராக்கியம் உண்டாகி யுத்தத்தினின்றும் விலகவேண்டுமென்னும் இச்சை ஜனித்தல்.

1. திருதராஷ்டிரனுடைய சைன்னியத்தைப் பார்த்து அதில் எவர்களுடன்தான் யுத்தம் செய்யவேண்டுமோ அவர்களைப் பார்க்கவேண்டுமென்கிற இச்சையுடன் இரண்டு சேனைகளின் மத்தியில் இரதத்தை நிறுத்தும்படி அர்ச்சுனன் கிருஷ்ண பகவானைக் கேட்டுக்கொள்ளல். 20—23.

அத வ்யவஸ்திதாந் த்ருஷ்ட்வா தார்த்தராஷ்ட்ராந் கபித்வஜ: ।
ப்ரவ்ருத்தே ஶஸ்த்ரஸம்பாதே தநுருத்யம்ய பாண்டவ: ॥
௨௰ ॥

கூய = பிறகு, யாதராஷ்டாநு = திருதராஷ்டரனுடைய பிள்ளைகளின் சேனைகளை, வ்யவஸ்திதாநு = யுத்தம்செய்ய சித்தமாக இருக்கிறதாக, த்ருஷ்டா = பார்த்து, ஶஸ்த்ரஸம்பாதே = (ஶஸ்த்ராணாம் ஸம்பாதே) ஆயுதங்கள் பறக்க, ப்ரவ்ருத்தே = தயாராயிருக்கையில், கபித்வஜ:=(கபி: த்வஜே யஸ்ய ஸ:) மாருதியை கொடியில் வைத்துக் கொண்டிருக்கிற, பாண்டவ: = அர்ச்சுனன், தநு: = தனுஸை, உத்யம்ய = உயரவெடுத்து,

பொழிப்புரை:—

கௌரவர்கள் யுத்தஞ்செய்யத் தயாராக நிற்பதையும் ஆயுதங்களைப் பிரயோகிக்கத் தயாராயிருப்பதையும் கண்டு மாருதியை த்வஜத்தில் வைத்துக்கொண்டிருக்கிற அர்ச்சுனன் தனுஸை கையில் எடுத்தான்.

(ஆநந்தகிரி)

அவதாரிகை:—

துர்யோதனாதிகள் பயத்தை அடைந்ததைப் பார்த்து பாண்டவர்கள் அதற்கு விபரீதமாயிருந்ததைச் சொல்லுகிறார்.

2 வ்யவஸ்திதாநு :—

பீதி அடைந்தபிறகு ஓடிப்போகுதல் அவசியமானாலும், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அசையாமல் நின்றார்கள்.

3. ஶஸ்த்ரஸம்பாதே :—

சஸ்திர சமுதாயம் பிரவிர்த்தித்திருக்குமளவில் அதாவது சஸ்திரங்கள் பிரயோகத்துக்காக தயாராயிருக்கும்போது.

(ஸ்ரீதரர்)

1. அவதாரிகை:—

இந்த சமயத்தில் கிருஷ்ணனும் அர்ச்சுனனும் செய்ததை சஞ்சயன் இதுமுதல் 4 சுலோகங்களால் தெரியப்படுத்துகிறான்.

2. கூய = மகா சப்தமுண்டானபிறகு.

(மதுஸூதனர்)

கபித்வஜ: பாண்டவ: (ஹநூமானை) மகாவீரனான ஹநூமானை துவஜரூபமாக அர்சுனனுக்கு அனுக்கிரகம் செய்தபடியால், கொஞ்சங்கூட பயமற்றவனாய் அர்சுனன் யுத்தத்திற்கு தனுஸை எடுத்தான்.

(ஸ்ரீ ஷாஸ்த்ர ரக்ஷா தீபிகா)

1. பாண்டவ:—

பாண்டுவினுடைய அதாவது அதிவீரனான அரசனுடைய புத்திரனாகையால் ஸ்வயம் சூரன் என்பது கருத்து.

2. கபித்வஜ:—சீதையாகிற இலட்சுமியை பகவான் இராமசந்திரனுக்குச் சேர்ப்பித்த ஹனுமான் சத்துருவின் அபஜயத்தைத் தேடி பாண்டவர்களுக்கு இராஜ்ஜிய இலக்ஷ்மியைக் கொடுக்கும்பொருட்டு அர்ச்சுனனுடைய கொடியில் உட்கார்ந்திருக்கிறார் என்பது கருத்து.

ஹ்ருஷீகேசம் ததா வாக்யமிதமாஹ மஹீபதே!

அர்ஜுன உவாச.

ஸேனயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேச்யுத ||உக||

மஹீபதே = (மஹீபதே) அரசனே, ததா = அப்போது, ஹ்ருஷீகேசம் = கிருஷ்ணபகவானைப்பார்த்து, இதம் = இந்த, வாக்யம் = வசனத்தை, ஆஹ = சொன்னான், அர்ஜுன: = அர்ச்சுனன், உவாச = பேசினான், அச்யுத: = கிருஷ்ணா, உபயோ: = இரண்டு, ஸேனயோ: = சேனைகளின், மத்யே = மத்தியில், மே = என்னுடைய, ரதம் = இரதத்தை, ஸ்தாபய = நிறுத்திவையும்.

தாற்பரியம்:—பிறகு அரசனே அர்ச்சுனன் கிருஷ்ணனைப் பார்த்து, அச்சுதா! என் இரதத்தை இரு சைன்னியங்களுக்கு மத்தியில் கொண்டுபோய் நிறுத்தும் என்பதாய்ச் சொன்னார்.

ஆத்தியாத்மிக ஞானரத்நாவளி.

ஹ்ருஷீகேச:—

இங்கேயும் இந்தபதம் உபயோகித்திருப்பதைப் பார்த்தால், கருத்து என்ன தோன்றுகிறதெனின்:—

ஹ்ருஷீக மென்றால் இந்திரியம்;
ஈஸ என்றால் ஸ்வாமி

இந்திரிய ஸ்வாமியான அதாவது இந்திரியத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கிற கிருஷ்ணன் அர்சுனனுக்கு அந்தர்யாமியாக இருப்பதால், சகல விர்த்தாந்தங்களையும் அர்சுனனுக்கு கௌரவ சைன்னியத்தைக் காட்டின பிறகு, அவனுடைய ஹிருதயத்தில் தயையை உற்பன்னம் செய்து, அவன் முகத்தினின்றும் 'நான் யுத்தம் செய்யவில்லை' எனபுறப்படும்படி செய்தான். பிறகு பிரசங்கத்தில் உசிதமான கீதையை உபதேசித்து தன்னுடைய விசுவரூபத்தைக்காட்டி, அவனுடைய அஞ்ஞான காரியமான அஹங்கையையும் நாசம் செய்தான். இப்படி அர்ச்சுனனுக்கு ஆத்ம ஞானம் வந்த பிறகு, தான் கேவலம் அகர்த்தா அதாவது யாதொன்றும் செய்யாதவன் என்பதாய் அவனுக்கு நிச்சயம் வரும். இப்படி பார்க்கும்போது கேவலம் இராஜ்ஜியத்தை அடையும் பொருட்டு கிருஷ்ணனை சாரதியாக அர்ச்சுனன் கேட்டுக்கொள்ள, அவர் சத் உபதேசத்தால் பரம பதத்தை அதாவது முக்தியை அடையும்படி செய்கிறார் என்பது ஸ்பஷ்டம். சத்துரு நாசத்துக்காக கிருஷ்ணனுடைய சகாயத்தைத் தேட, ஆத்மவிஷய ஞானத்தை நாசம் செய்கிறார் என்பதற்கு பல திருஷ்டாந்தம் கொடுக்கலாம்.

தாகத்தால் வருத்தப்படுகிறவன் அமிருதபானம் செய்தால் தாகசாந்தியாவது மன்றியில் அமிருதத்தின் குணமாகிய மரணமில்லாமையைச் செய்யும் தன்மையால் அவன் மரணமில்லாமையை அடைகிறான். சமயல் பண்ணவேண்டுமென்கிற உத்தேசத்துடன் நெருப்பு மூட்டினால் குளிரும் அந்தகாரமும் சகஜமாகவே நிவிர்த்தியாய்விடுகின்றன.

சாராம்சம் :—எந்தவிடத்தில் எந்த குண விசேஷமிருக்கிறதோ அது சமயம் வந்த சமயத்தில் வெளிப்படாமலிருக்கிறதில்லை. இந்த நியாயப்படி கிருஷ்ணனை சாரதியாக அர்சுனன் கேட்டுக்கொண்டிருந்தான். ஆயினும் கிருஷ்ணன் தன் மஹிமையை வெளிப்படுத்தி சம்சார தாபத்தால் பயமடைந்திருக்கிற ஜன

ங்களை உத்தாரணம் செய்யும்பொருட்டு கீதையின் உபதேசத்தைச் செய்யும்படி கொண்டுவந்து சேர்த்தான்.

(நீலகண்டர்)

இந்திரியங்களை பிரவிர்த்திக்கும்படி செய்கிறதினுல் சர்வ அந்தக்கரண விருத்தியையும் அறிகிறவர்.

2 அச்யுத:—

அர்ச்சுனன் கிருஷ்ணனுக்கு இந்தவிசேஷணத்தைக் கொடுத்ததினுல் என்ன காட்டினுன் எனின்—நான் உன்னுடைய தாசனுயிருக்க உன்னை ஆக்ஞாபிக்கிறேன். இதனுல் உன்னை அவமதித்ததாகஉனக்கு சுத்தமாய் தோன்றமாட்டாது. மேலும் இரண பூமியில் நீ முன்னின்ருலும் உனக்கு பயம் சுத்தமாயில்லை. ஏனெனின் நீ அச்சுத அதாவது தேசகால வஸ்து யோகத்தால் விகாரமடையாதவன். அப்போது யுத்தஞ்செய்து வருகையில் இரண பூமி யாகிற பிரதேசத்தினின்றும் இரதமாகிற வஸ்துவை விட்டு நழுவிவிடும்படிச் செய்ய எவன் சமர்த்தனுவான். இந்த அபிப்பிராயத்தை அர்ச்சுனன் இந்த அச்யுத பதத்தால் தெரிவிககிருன்.

மேலும், சர்வப்பிரகாரம் நீ அச்சுதனனுயிருப்பதால் (உ நிர்விகாரியா யிருப்பதால்) நீ சாந்தியினின்றும் நழுவமாட்டாய். ஆகையால் பக்தன் ஆக்ஞை செய்ததினுல் உனக்கு கோபமும் வரமாட்டாது என்பதையும் அர்ச்சுனன் சூசிப்பிக்கிருன். மத்தியிலிருக்கிற இரதத்தை அவர்கள் சலிக்கும்படி செய்வார்களோ எனின், उच्युत இரதத்தைக்கூட சலிக்காமல் செய்ய சமர்த்தனுயிருக்கிருய் என்று சொல்லுகிருன்.

(ஆரிய தர்ம இரஹஸியம்)

1. உபயோ:—

இரண்டு ஸைன்னியங்களுக்கு மத்தியில் இரததை நிறுத்தும்படி அர்ச்சுனன் கிருஷ்ணனுக்குச் சொன்னதானது மகா பெரிய காரியமில்லாமலிருக்க அதையும் எடுத்து சஞ்சயன் திருதராஷ்டரனுக்குச் சொன்னதின் உத்தேசம்.

திருதராஷ்டரனே, கிருஷ்ணனைக் கேட்காமல் அர்ச்சுனன் யாதொரு காரியத்தையும் செய்கிறதில்லை. சத்துரு சைன்னிய

த்திலிருக்கிற வீரர்களைப்பார்க்கிற விஷயத்தில் கூட கிருஷ்ணனுடைய அபிப்பிராயத்தை வாங்குகிறான்.

(மதுசூதனர்)

மஹீபதே :—

இந்த விசேஷணத்தைக் கொடுப்பதில் சஞ்சயனுடைய கருத்து என்னவெனின்—பாண்டவர்கள் விசாரிக்காமல் மனதிற்குத் தோன்றுகிறபடி செய்யப்பட்டவர்களல்ல. அவர்கள் அந்தர்யாமியான கிருஷ்ணன் சொல்லுகிறபடி நடக்கிறவர்களானதால் அவர்களுக்கு அபஜயம் நேரிடமாட்டாது. நீங்களோ ஒருவனுடைய வார்த்தையையும் கேட்காமலிருப்பதுமன்றியில், நீதியையும் தர்மத்தையும் லக்ஷியம் செய்யாமலும் கேவலம் அவிசாரத்தால் பாண்டவாளின் இராஜ்ஜியத்தை எடுத்துக்கொண்டீர்கள். அப்போது உங்களுடைய நாசமே ஆகவேண்டியது. மேலும் சகல பூதங்களுக்கும் அந்தர்யாமியான கிருஷ்ணனைக்கூட ஆஞ்ஞை செய்யும்படியான அதிகாரத்தை அர்ச்சுனன் பெற்றவனாயிருக்கிறான். இவன் பெருமை என்ன இருக்கவேண்டும். பகவத் பக்தர்களின் அதிகாரமே அத்விதீயமாயிருக்கிறது. அப்படியே கிருஷ்ணனும் எவ்வளவு பக்த வத்சலர் என்பதும் தெரியவருகிறது. பகவத் பக்தர்களுக்கு எந்த வார்த்தையும் அசாத்தியமன்று. அகிலபிர்ம்மாண்டநாயகரான பரமாத்மாவை கூட அவர்கள் ஆஞ்ஞாபிக்கிறார்கள். அந்த ஆஞ்ஞையையும் அவர் நிறைவேற்றுகிறார். அப்படியிருக்க இந்த யுத்தத்தில் பகவத் பக்தனான பாண்டவனுக்கு ஜயமுண்டாகிறதென்பதில் என்ன சந்தேகம் ?

(பாஷ்யோத்கர்ஷ-தீபிகா)

பலமில்லாமலும், புத்தியில்லாமலுமிருக்கிற உங்களால் கபடமாய் சம்பாதிக்கப்பட்ட மஹீபதித்த்வம் அதி சூரர்களாயும், பகவான் ஹனுமானால் அனுக்கிரகிக்கப்பட்டவர்களாயும்,புத்திமான்களாயுமிருக்கிற பாண்டவர்களுக்கே கிடைக்கும், நீங்கள் அதை யடையலாமென்பது வீணாசை. இதை நீங்கள் விட்டுவிடவேண்டியது என்பதை சூசிப்பித்துக்கொண்டு மஹீபதே என்று சஞ்சயன் சொல்லுகிறான். (பின்னும் வரும்)

(Right of translation reserved.)

(A. S.)

தியாஸபி.

மேற்படி கோஷ்டியில் ஜீவன்முக்தர்களும் பல வகுப்பாய்ச்சேர்ந்த யோகிகளும் சித்தர்களும் அங்கத்தவர் களாயிருந்து கொண்டு அப்போதைக் கப்போது ஜன சமூகத்தில் ஸத்தியங் குன்றி அஸத்தியம் மேலிடுங் காலத்திலும் அல்லது உலகத்தில் ஞானோபதேசம் செய்வதற்கு வாய்க்கிற காலத்திலும் தங்களிலொருவரை உலக க்ஷேமத்தின் பொருட்டு அப்போதைக் கப்போது அவதரிக்கும்படி செய்வித்து அவர் மூலமாய் ஜனங்களுக்கு எவ்வளவுக்கு ஞானத்தை கிரஹிக்க சக்தி யுண்டோ அவ்வவ அவ்வளவுக்குத் தக்கவாறு ஞானோபதேசம் செய்வித்துப் பின்பு மறைவார்கள். இவ்விதமாகவே உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு மதமும் மேற்படி கோஷ்டியாரின் வர்க்கத்தினரால் பரிபாலிக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. ஆனது பற்றி எல்லா மதங்களின் உட்கருத்துகளை ஆராய்ந்து பார்க்குங்கால் தத்துவ விஷயங்களில் வெகுவான வித்தியாசங்களில்லை. ஒரே சமயத்தை அனுஷ்டிப்பவர்களே காலக் கிரமத்தில் எவ்வித ஆதாரமுமில்லாமல் பல விஷயங்களைத் தப்பாக அனுஷ்டித்துக் கொண்டு வரும் சந்தர்ப்பங்களிலுங்கூட வித்தியாசங் களுண்டாகலாம். ஆகையால் நாமெல்லோரும் மதப் பொறுமையை யப்பியஸித்து வந்து சகோதர பாவத்துடனிருந்து ஆதி ராஜாவாகிய மனுவினுடைய இஷ்டத்தையும் நிறைவேற்றி உத்தம மார்க்கத்தில் நடப்பதினுல் பிர்ம்ம ஞானம் முதலியவைகளை சம்பாதித்து மோக்ஷ சாம்பிராஜ்ஜியத்தை அடையக் கூடிய பாக்கியத்தை ஜகதீசுவரன் நமக்குக் கொடுத்தருள் புரிவாராகவும்.

V. R.

பிர்ம்மஞான விளக்கம்.



1. இப்பத்திரிகையின் தலப்பில் எழுதப்பட்டிருக்கும் படமானது நமது அண்டத்தை (our solar system) க்காட்டுகிறது. அதன் மத்தியிலுள்ள உருவம் நாம் தினமும் பார்க்கிற சூரியன். அந்த சூரியனைச் சுற்றியிருக்கிற ஏழு உருவங்களும் ஏழு கிரகங்கள் அல்லது பிரபஞ்சங்கள். அவைகளில் 4-வது உருவம் நம்முடைய பிரபஞ்சம். இதே மாதிரியாக அனேக கோடி அண்டங்களிருக்கின்றன. நாம் இராக்காலத்தில் ஆகாயத்தில் பார்க்கும் ஒவ்வொரு நக்ஷத்திரமும் நமது சூரியனைப் போல சமமானதும் அதைவிட அதிகப்பெரிதும் சிறிதுமான சூரியர்கள். அந்த ஒவ்வொரு நக்ஷத்திரமான சூரியனைச் சுற்றிலும் அநேக பிரயஞ்சங்களிருக்கின்றன. இவ்விதமாய் அநேகம் கோடி அண்டங்களிருக்கின்றன. எல்லா அண்டங்களும் சேர்ந்து ஒரே பிர்ம்மாண்டமென்று நம்முடைய சாஸ்திரங்கள் கூறுகின்றன.

2. இப்போது நமது அண்டத்தைப்பற்றிப் பேசுவோம். இந்த அண்டம் உண்டாவதற்குமுன், ஈசுவரன் மனுதர்மசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி, கோடிசூரியப் பிரகாசமுள்ள ஒரு ஜோதி மலைபாய்த்தோன்றினர். அவரே பிர்ம்மா விஷ்ணு ருத்திரன் என்ற திரிமூர்த்திகளாகவானர். இந்த மூன்று மூர்த்திகளும் ஈசுவரனுடைய சக்திகள். அவர்கள் முறையே பிரபஞ்சங்களை சிருஷ்டிக்கவும் காப்பாற்றவும் முடிவு காலத்தில்

அழிக்கவும் ஏற்பட்டவர்கள். ஈசுவரன் ஒருவரே தொழிலை உத்தேசித்து மூன்று மூர்த்திகளாக யிருக்கிறுரே யொழிய வாஸ்தவத்தில் ஒருவர்தான். திரிமூர்த்திகள் தோன்றும் காலத்தில் அவர்கள் கூடவே ஏழு சிருஷடி கர்த்தாக்கள் (Planetary Logoi) தோன்றினுர்கள். இவர்கள் முந்தின கல்ப்பங்களில் மேன்மையான பதவியை அடைந்து இந்த அண்டம் உண்டாகும் காலத்தில் ஈசுவரனுக்கு உதவி புரியும் பொருட்டு வந்தவர்கள். இந்த சிருஷ்டி கர்த்தாக்கள் ஒவ்வொருவரும் நம்முடைய அண்டத்தினுள்ள ஒவ்வொரு பிரபஞ்சத்திற்கும் அதிகாரிகளானுர்கள். இவர்களும் ஈசுவரனைப் போலவே தங்கள் பிரபஞ்சங்களில் படைத்தல் காத்தல் அழித்த லென்னும் முத்தொழில்களையும் நடத்திவருகிறுர்கள். இவர்களைத்தான் நமது சாஸ்திரங்களில் அதிதியின் புத்திரர்களென்றும் 8-வது புத்திரன் மார்த்தாண்டனென்று பேரையுடைய நமது சூரியனென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

3. மேற்சொன்ன ஏழு சிருஷ்டி கர்த்தாக்களைச் சுற்றிலும் 12 தேவக்கூட்டத்தார்கள் (Hierarchies) இருக்கிறுர்கள். அவர்களைப்பற்றி அடுத்த பத்திரிக்கையில் விபரமாய்ப் பேசுவோம்.

4. நாம் வசிக்கிற 4-வது பிரபஞ்சத்தைப்பற்றி இப்போது கொஞ்சம் சொல்லுவோம். இந்த பிரபஞ்சமானது நமக்கு இப்போது தோன்றுகிறபடி ஸ்தூலமான ஒரு கோளம் மாத்திரமல்ல. இதைத் தவிர சூட்சமமான இன்னும் 6 கோளங்கள் (Globes) சேர்ந்திருக்கின்றன. அதினுல் இதற்கு கோளத்தொகுதி என்று பேர் (chain of globes). இந்த ஏழு கோளங்களையும் காட்டக்கூடிய படத்தை அடியில் எழுதியிருக்கிறது. இந்த ஏழு கோளங்களுக்கும் அடையாளமாக A முதல் G வரை அக்ஷரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் A G கோளங்கள் ஒரு லோகத்திலும் B F கோளங்கள் ஒரு லோகத்திலும் C E கோளங்கள் வேறு லோகத்திலும் D கோளம் மற்ருெரு லோகத்திலுமிருக்கின்றன. ஆனுல் A G கோளங்கள் மகா சூட்சமமான அணுக்களால் அமைக்கப்பட் டிருக்கின்றன. B F கோளங்கள் அதிக ஸ்தூலமான அணுக்களாலும் C E

கோளங்கள் இன்னும் அதிக ஸ்தூலமான அணுக்களாலும் D கோளம் எல்லாவற்றையும் விட மகாஸ்தூலமான அணுக்களாலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.



5. ஆரம்பத்தில் ஜீவர்கள் மகா சூட்சமமான அணுக்களால் அமைக்கப்பட்ட A கோளத்தில் அனேக ஆயிர வருஷங்கள் வாசமாயிருந்து அந்த கோளமானது வாச யோக்கியமில்லாமல் மங்கிப்போகும்போது B கோளத்தில் வந்து பிறப்பார்கள். இதிலும் அனேக ஆயிர வருஷங்கள் இருந்து இந்த கோளமும் வாச யோக்கியமில்லாமல் மங்கிப்போகும்போது C கோளத்தில் பிறப்பார்கள். இவ்விதம் D E F G கோளங்களில் வாசம் செய்துகொண்டு வருவார்கள். இப்படி ஜீவர்கள் A முதல் G வரை கோளங்களில் ஒருதடவை பிரயாணம் வருவதற்கு ஒரு சுத்து (round) என்று பேர். இந்தமுதல் சுத்து முடிந்த உடனே ஜீவர்கள் 2-வது சுத்து ஆரம்பிப்பார்கள். அப்போது மங்கிப்போயிருந்த A கோளமும் மற்ற கோளங்களும் ஒன்றின்பின் ஒன்றாய் வாச யோக்கியமாகும். இந்த விதமாய் ஜீவர்கள் A முதல் G வரை கோளங்களில் 7 தரம் சுற்றிவருவார்கள். இப்படி 7 தரம் சுற்றி வருகிறகாலத்துக்கு ஒரு மன்வந்திரமென்று பேர். அப்பால் 7 கோளங்களடங்கிய இந்தப் பிரபஞ்சமானது கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்துபோய்விடுகிறது அப்போது ஜீவர்கள் தாங்கள் அடைந்திருந்த நிலமைப்படி அனேகம் கோடி காலம் ஈஸ்வரனிடத்தில் ஐக்கியமாயிருப்பார்கள். இப்படியிருக்கிற காலத்துக்கு பிரளயமென்று பேர். அப்பால் இந்தப் பிரபஞ்சமானது 7 கோளங்களுடன் மறுபடியும் உண்டாகிறது. இப்படி உண்டாவதற்குத்தான் இந்தப் பிரபஞ்சத்துக்கு 2-வது ஜென்மம் அல்லது 2-வது மன்வந்தரமென்று பேர். இவ்விதமாய் இந்தப் பிரபஞ்சத்துக்கு இதுவரை மூன்று ஜென்மங்களாய்விட்டது. இப்போது 4-வது ஜென்மம்

நடக்கிறது. முதலாவது ஜென்மத்திலும் 2-வது ஜென்மத்திலும் இந்தப் பிரபஞ்சமானது இன்ன நிலைமையிலிருந்ததென்று சொல்லுவதற்குப் போதுமான ஆதரவுகள் இப்போது இல்லை. 3-வது ஜென்மத்தைப்பற்றி கொஞ்சம் தெரிகிறது. அந்த ஜென்மத்தில் நமக்கு இப்போது காணப்படுகிற சந்திரன் நாம் வாசமாயிருக்கிற இந்த பூமியைப்போல் ஸ்தூல பூமியாயிருந்தது. அந்தக காரணத்தினால் அந்த ஜென்மத்துக்கு சந்திர மன்வந்திரமென்றும் (Lunar Manvantra) சந்திரகோளத் தொகுதி (Lunar Chain) என்றும் பேர். அதுபோலவே இந்த 4-வது ஜென்மத்துக்கு பூகோளத் தொகுதி (earth chain) என்று பேர். இந்த ஜென்மத்தில் ஜீவர்கள் A முதல் G வரை கோளங்களில் 3 சுத்து வந்து விட்டார்கள். இப்போது 4-வது சுத்து ஆரம்பித்து 4-வது கோளமான இந்த பூமியில் ஜீவர்கள் வாசமாயிருக்கிறார்கள். அந்த ஜீவர்களில் சேர்ந்தவர்கள்தான் நாமும்.

6. இப்போது ஜீவர்களைப்பற்றி விசாரிப்போம். கல் முதலான தாதுவர்க்கங்களிலும் (Mineral kingdom) செடிகள் மரங்கள் முதலான வனஸ்பதி, ஒஷதிஸ்தாவர வர்க்கங்களிலும் (Vegetable kingdom, பறவைமிருகம்முதலான பிராணிவர்க்கங்களிலும்(Animal kingdom)மனிதர்களாகிய மானுஷவர்க்கங்களிலும் (Human kingdom) ஜீவர்கள் இருக்கிறார்கள். தாதுவர்க்கங்களில் ஜீவர்கள் வருவதற்குமுன் சூட்சமமான 3 வகை கோசங்களிலிருப்பார்கள். அவைகளுக்கு மூன்றுவகை பூதவர்க்கங்கள் (Three Elemental kingdoms) என்று பேர். ஆக ஏழுவகை ஜீவர்களும் கோளங்களில் ஒவ்வொரு சுத்திலும் ஒவ்வொருபடி உயர்ந்துகொண்டு வருவார்கள். உதாரணமாக:—கல் முதலியவற்றிலுள்ள ஜீவர்கள் ஒரு சுத்து முடித்து அடுத்த சுத்து ஆரம்பிக்கும் காலத்தில் செடிகள் மரங்கள் முதலான வர்க்கங்களில் ஜீவிப்பார்கள். இப்படியே கீழ்ப்படியிலுள்ளவர்கள் மேலப்படிக்கு உயர்வார்கள். ஒரு சுத்தின் ஆரம்பத்தில் மனிதர்களாயிருந்த ஜீவர்கள் அந்த சுத்தின் கடாசியில் அதிக மேன்மையான பதவிக்கு வருவார்கள். அதாவது மோக்ஷமடையவேண்டிய மார்க்கத்துக்கு வருவார்கள். இவ்விதம் ஜீவர்கள் வரவர மேன்மையான பதவியை அடைந்துவருகிறார்கள். இதற்காகவே கோள

ங்களும் பிரபஞ்சங்களும் ஈசுவரனால் உண்டாக்கப்பட்டிருக்கின்றன

7. இனி சிருஷ்டிக்கிரமத்தைப்பற்றிப் பேசுவோம். ஒரு அண்டத்தின் ஆரம்பத்தில் ஈசுவரன் ஜோதிர் மலையாய்த் தோன்றினரென்று சொன்னோ மல்லவா? அப்படித் தோன்றுமுன் அவர் ஒருவரேயிருந்தார். வேறொன்றுமில்லை. அந்த நிலைமையில் அவருக்கு நிர்க்குணப்பிரம்மமென்று பேர். பிரபஞ்சங்களைப் படைத்துக்காத்து அழிப்பதற்காக அவர் உருவம் எடுத்துக்கொள்ளும்போது அவருக்கு சகுணப் பிரம்மமென்று பேர். நிர்க்குணத்திலிருந்து சகுணமாகும்போது உருவமாவதற்காக ஒரு பொருள் வேண்டுமெல்லவா? அப்பொருளுக்குத்தான் அவ்வியக்தம் அல்லது மூலப்பிரகிருதி என்று பேர். ஆக சகுணப்பிரம்மமாகிய ஈசுவரனும் அவருக்கு உடலாகிறமூலப்பிரகிருதியும் நிர்க்குணப் பிரம்மத்திலிருந்து ஒரே காலத்தில் வெளியே வந்தன. அண்டம் அழியுங் காலத்தில் சகுணப்பிரம்மமாகிற ஈசுவரனும் அவருடைய உடலாகிற மூலப்பிரகிருதியும் ஒரே காலத்தில் நிர்க்குணத்தில் லயமடைவார்கள்.

8. மேற்சொன்ன மூலப்பிரகிருதியிலிருந்து திரிமூர்த்திகளில் ஒருவரான பிரம்மாவானவர் ஆகாய அணுக்களால் ஒரு லோகத்தை (Atmic plane) சிருஷ்டித்தார். இந்த ஆகாய அணுக்களிலிருந்து இன்னும் கொஞ்சம் ஸ்தூலமான வாயு அணுக்களால்2-வது லோகத்தை (Budhic plane) சிருஷ்டித்தார். இந்த வாயு அணுக்களிலிருந்து அதைவிட கொஞ்சம் ஸ்தூலமான அக்கினி அணுக்களால் 3-வது லோகத்தை (Mental plane) சிருஷ்டித்தார். இந்த அக்கினி அணுக்களிலிருந்து அதைவிட கொஞ்சம் ஸ்தூலமானஅப்பு அதாவது தண்ணீர் அணுக்களால் 4-வது லோகத்தை (Astral plane) சிருஷ்டித்தார் கடாசியாக மேற்சொன்ன அப்பு அணுக்களிலிருந்து அதைவிட அதிக ஸ்தூலமான) பிருதிவி அணுக்களால் 5-வது லோகத்தை (Physical plane) சிருஷ்டித்தார். இப்படி 5 லோகங்களை உண்டாக்கினரென்று சொன்னதினால் ஆகாய அணுக்களால் உண்டாயிருக்கிற லோகம் எல்லாலோகங்களைப் பார்க்கிலும் அதிக உயரத்திலிருப்பதாகவும், அதற்குக்கீழே வாயு அணுக்களால் உண்டா

யிருக்கிற லோகமும் அதற்குக் கீழே மற்றலோகங்களும் ஒன்
றின் கீழ் ஒன்றாக இருப்பதாய் கொஞ்சம்கூட நினைக்கக்கூ
டாது. எல்லாலோகங்களும் ஒன்றோடொன்று கலந்து பின்னி
க்கொண்டு ஓதப்புரோதமாயிருக்கின்றன. ஒரு வேஷ்டியைத்த
ண்ணீரில் நனைத்தால் எப்படி தண்ணீரும் வேஷ்டியும் ஒன்றோ
டொன்று பின்னிக்கொண்டிருக்குமோ அப்படியே எல்லா லோ
கங்களும் பின்னிக்கொண்டிருக்கின்றன. இந்த லோகங்களை
நம்முடைய சாஸ்திரங்களில் ஜனோலோகம், மகர்லோகம், சுவ
ர்லோகம், புவர்லோகம், பூலோகம் என்று சொல்லப்பட்டிருக்கி
றது. இந்த 5 லோகங்கள் தவிர வேறே இரண்டு லோகங்களி
ருக்கின்றன. அவைகளுக்கு தபோலோகம், சத்தியலோகமெ
ன்று பேர். அந்த லோகங்களில் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரமெ
ன்ற முத்தொழில்களை நடத்திவருகிறார்கள். இந்த ஏழுலோகங்
களில் ஒவ்வொன்றிலும் ஏழு உட்பிரிவுகள் (Sub planes) இரு
க்கின்றன. அவைகளைப்பற்றி பின்னால் சொல்லுவோம்.

9. பிரம்மாவானவர் மேற்சொன்ன 5 லோகங்களை உண்
டாக்கினாரென்று சொன்னோமே. அவைகளை எப்படி உண்
டாக்கினாரென்றால் குயவன் மண்ணை எடுத்து பானை சட்டி செய்
வதுபோல் மூலப்பிரகிருதி யென்னும் பொருளிலிருந்து ஆகா
யம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி என்னும் லோகங்களை செ
ய்யவில்லை. ஜீவர்கள் வாசம் செய்வதற்கு லோகங்கள் உண்டா
கவேணுமென்று அவர் இச்சித்தமாத்திரத்தில் அவருடைய ஜீவ
சக்தியானது மூலப்பிரகிருதியின் ஒவ்வோரு அணுவிலும் பிர
வேசித்து முதலில் ஆகாச அணுக்களால் ஒரு லோகமும் அப்
பால் மற்ற லோகங்களும் உண்டாயின. அவருடைய ஜீவசமு
த்திரத்திலிருந்து அவருடைய சக்தியானது அநேக அலைகளாய்
புறப்பட்டு மேற்சொன்ன 5 லோகங்களும் உண்டானபடியால்
இதற்கு 1-வது ஜீவ அலை (First life wave) என்று பேர். இந்த
வேலையில் பிரம்மாவுக்குக் கீழ்ப்பட்ட அநேக தேவர்கள் உதவி
புரிந்துவருகிறார்கள். இவ்வளவுதான் பிரம்மாவின் வேலை. அவர்
சிருஷ்டித்திருக்கிற 5 லோகங்களிலுமுள்ள ஒவ்வொரு அணுவி
லும் (Atoms) அணுத்தொகுதிகளிலும் (Molecules) அவருடைய

ஜீவசக்தியானது இந்த அண்டம் அழியும் வரை இருந்துகொண்டே இருக்கும்.

10. ஆனால் ஜீவர்கள் வாசஞ் செய்வதற்காக மேற்சொன்ன 5 லோகங்களும் உண்டாயிற்றென்றுசொன்னால் ஜீவர்கள் அந்த லோகங்களில் எப்படிக்குடியிருக்கிறது. குடியிருக்கவோ சரீரங்கள் வேண்டுமே. பிரம்மா சிருஷ்டித்திருப்பதெல்லாம் அணுக்களும் அணுத்தொகுதிகளும் தான். அதாவது ஒரு வீடு கட்டுவதற்காக செங்கல், மண், சுண்ணாம்பு முதலான சாமான்களை வேலைக்காரன் சேகரிப்பதுபோல் பிரம்மாவானவர் அணுக்களையும் அணுத்தொகுதிகளையும் சேகரிக்கிறார். எப்படி ஒரு வீடு கட்டுகிற கொத்தன்வந்து வேலைக்காரன் சேகரித்து வைத்திருக்கிற செங்கல் முதலான சாமான்களைக்கொண்டு வீடு கட்டுவானோ அப்படியே விஷ்ணுவானவர் அணுக்களையும் அணுத்தொகுதிகளையும் கொண்டு ஜீவர்களுக்கு வீடுகளாகிய சரீரங்களை உண்டு பண்ணுகிறார், இவரும் குயவனைப்போல செய்கிறதில்லை. ஜீவர்களுக்கு சரீரங்கள் வேண்டுமென்று அவர் இச்சித்தமாத்திரத்தில் அவருடைய ஜீவசமுத்திரத்திலிருந்து சக்தியானது அனேக அலைகளாகக்கிளம்பி அணுக்களையும் அணுத்தொகுதிகளையும் ஒன்றுசேர்த்து உருவமாகும்படி செய்கிறது. இதற்கு 2-வது ஜீவ அலை (2nd Life wave) என்று பேர். இந்த சக்தியானது இந்த அண்டம் அழியும்வரை ஜீவர்களுக்கு பற்பல சரீரங்களையுண்டாக்கிக்கொண்டிருக்கிறது. இந்த விஷயத்திலும் அநேக தேவர்கள் உதவிபுரிந்து வருகிறார்கள்.

11. இப்படி ஜீவர்கள் வசிக்கும்படியாய் சரீரங்கள் சிருஷ்டிக்கப்பட்டு வருகையில் ஜீவர்களின் கிரணங்கள் (Rays) சமுத்திர அலைகள்போல் புறப்பட்டு அவைகளில் குடியேறுகின்றன. இதற்கு3-வது ஜீவ அலை (3rd Life wave) என்று பேர். இந்த விஷயத்திலும் அநேக தேவர்கள் உதவி புரிந்து வருகிறார்கள்.

வெங்குசாமி அய்யர்,

மதுரை,

நன்மை தீமை.

பின்வரும் பிரசங்கமானது சிறப்புற்றோங்கும் ராமகிருஷ்ண கூட்டத்தைச் சார்ந்த சுவாமி அபேதாநந்தரால் அமெரிக்கா தேசத்தில் நியூயார்க்கு என்னும் பட்டணத்தில் டெக்ஸடோ மண்டபத்தில் 1899-ஞு நவம்பர்மீ 19உ பிரசங்கம் செய்யப்பட்டது.

நன்மை தீமையாகிய புண்ணியபாவம்.

பிர்மத்தை நாடியவன் நன்மை தீமைகளைக் கடந்தவனுவான்
பகவத்கீதை அத் II. சுலோகம் 50.

பிரகிருதியின் காட்சியை உற்றுநோக்கியவர்கள் மாருன இருதத்துவங்களால் ஒவ்வொன்றும் இருபகுதிகளாக பிரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். நன்மை, தீமை, குணதோஷம் அறிவு அறியாமை, ஒளி இருள், உஷ்ணம் சீதளம், ஆகர்ஷணம் நிகர்ஷணம், பக்ஷம் பக்ஷமின்மை, சௌக்கிய அசௌக்கியம் பிறப்பிறப்புகளென்று சொல்லப்படுகிற பல நாமங்களையுடைய மாருன இரண்டு கொள்கைகளும் இயற்கையில் நிதரிசனம். ஒரு பக்கத்தில் நன்மை, குணம், புத்தி, பிரியம், பிறருக்கு அடிமை இவைகளைப் பார்த்தால் வாழ்வு சுகமாகக்காணப்படுகிறது. இதற்கு மாருக தீமை, போக்கிரித்தனம், அறியாமை, அழுக்காறு, சுயநலம், கொலை, வறுமைநோய், கொடிய தொத்துவியாதிகளும் காண்கிறோம் அதனுல் உயிர்துறப்பது நலமென்று காணப்படுகிறது. பிரகிருதியானது ஒருவகை அப்யாஸத்துடன் சுகானுபவங்களையும் ஆசிர்வாதத்தையும் கொடுக்கத்தயாராகயிருப்பதுடன் மற்றொரு வகையானது கோரமானதாக பயப்படும்படியான பளபளப்புள்ள கூர்மையையுடைய கத்தியுடன் புலப்படுகிறது. இத்தியாதி துவைதபேதங்களை யாம் மறுக்கமுடியாது. நாம் உயிருடன் வாழ்வதற்குள் இவைகளிலொன்றை யனுபவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். நாம் நல்லவைகளை யனுபவிக்கும் போது சந்தோஷப்படுவதுடன் சுகானுபவர்களாகிறோம்; ஆனால் அதற்கு நேரிடையான துக்கங்களைப் பார்க்கும்போது உடல் பத

றுகிறது. இயற்கையானது இவ்விதமாக இரண்டையும் காட்டி வருகிறது. இப்பொழுது நாம் பார்ப்பது அநேகவாயிரவாண்டு களுக்குமுன் நம்முன்னோர்களாலும் இனிவரும் வார்சுகளாலும் அனுபவிக்கப்படும். அநேகவாண்டுகள் சென்றன; அநேக மத ங்கள்தோன்றி அழிந்தன; அப்படியிருந்தும் பிரபஞ்சசிருஷ்டி தன் காரியங்களில் வழுவிற்று? இல்லை. அதன் கணக்குகள் எப்பொழுதும் நடந்துகொண்டிருப்பதே. அதன் போக்கு ஒரே வழி புராதன ஜனங்களுடைய மதங்களை யாராய்வோமாயின இப் பொழுதுகாணப்படும் இத்துவைதபாவங்கள் அக்காலமிருந்து பிரத்தியக்ஷமாக விருக்கிறது. காணப்பட்ட வுலகத்திலுண்டான ஒன்றொற்கொன்று மாறான காரியங்களை முற்றிலும் ஆராய பிர யத்தனஞ் செய்திருக்கிறார்கள். பிரகிருதியின் நன்மை தீமை கள் உண்மையை யறியவும், அது எவ்விதம் எக்காரணத்தினால் உண்டாயிற்றென்று விசாரணைபுரிய மதியூகிகளும், சாஸ்திரக் ஞர்களும் முழுமனதுடனும், சந்தோஷத்துடனும் பிரயத்தனப் பட்டிருக்கிறார்கள். உலகத்திலுள்ள எல்லா மதக்கோட்பாடு களும் சாஸ்திரங்களும் நன்மை தீமைகளில் உண்மையைப் பல வழியாக ஆராயப் புகுந்த மனவெழுச்சியென்றும், தீமையென் று ஒன்று இருப்பானேன் என்று அறியவும் இவ்வளவு துக்கம் துன்பம், குற்றம், நம்மிடமிருப்பானேனென்றும் அதை வேரறு க்க முயன்றதாகும்.

அப்படிப்பட்ட முயற்சிகளும், விசாரணைகளும் மூன்று விதமாக வகுக்கப்படலாம்:—

ஒன்றாவது:—உலகத்திலுள்ளது எல்லாம்நன்மைக்கேஉரித் தானது.

(உலகாயதம்)

இரண்டாவது:—இதற்கு மாறான கொள்கை.

மூன்றாவது:—அத்துவைதம்.

புராதன பார்சீகர்கள் அல்லது இரானியர்களுடைய சாந்தவத்தை என்னும் புராதனக் கிரந்தத்தில் பிரபஞ்சத்தி ன்துவைதவியற்கையைப்பற்றி எல்லாம் நன்மையின் பொரு

ட்டே உண்டாகி யிருப்பதாகக்காணப்படுகிறது. இந்த புராதன பார்சீகர்கள் நன்மை யென்பதும் தீமை யென்பதும் இரண்டு வேறுபட்ட பொருள்களென்றும், இவற்றை யுண்டாக்கிய அதி தேவதைகளும் இருவரென்பது மிவர்கள் கொள்கை. நன்மை யையே கொடுக்கும் தெய்வத்துக்கு அஹுரமேஸ்டாவென்று பெயர். தீமைக்கு காரணமாயிருக்கும் தெய்வத்திற்கு அஹ்ரிமான் என்று பெயர். சர்வ வியாபியாய், கிரியாசக்தியையுடைய வராயும், உலகத்தி லேற்பட்ட சற்காரியங்களுக்கு நாதனுய், பாதி உலகத்தைப் படைத்தவராயிருப்பவர் அஹுர்மேஸ்டா; பாவதெய்வமாகிய அஹ்ரிமா னென்பவரால் தீமையையுடைய பாதி உலகம் சிருஷ்டிக்கப்பட்டது.

முதலில் இவ்விரு தெய்வங்களும் ஒன்ருக சிநேகத்துடன் வசித்துவந்துபிறகு அஹ்ரிமான்பிரிந்து கலகம்செய்து எப்பொதும் எதிரியாகவே இருந்துவந்தான். சற்குண தெய்வமாகிய அஹிர்மேஸடா சர்க்கருமங்களைச் செய்துவரும்போது துர்தேவதையாகிய அஹ்ரிமான் பாவம் பரவும்படியாக துஷ்கிர்த்தியங்களை பரவச்செய்தான். முடிவில் தண்டனை யடைந்தபோதிலும் தன்னுலியன்றவளவு பலம் வாய்ந்த தன் எதிரியை புண்படுத்திவந்தான். இந்த யுத்தமானது பிரளயத்தில் ஜட்ஜுமெண்டுடே என்று சொல்லும் யெமதெண்டனை காலத்தில் நன்மையானது தீமையை வெல்லும்; பிறகு பாவதோஷங்களை நீக்கி அஹுரமேஸடா நல்ல பிராணிகளை சிருஷ்டிப்பர். அஹுரமேஸடாவின்கீழ் நல்ல தூதர்கள் அநேகரிருக்கிருர்கள்; அதே மாதிரியாக அஹரிமானுக்கும் அநேக துர்தேவதைகள் சைந்நியங்களாகவிருக்கிருர்கள். சாந்தவஸ்தா என்னும் பாரசீக கிரந்தங்களில் பாவ புண்ணியங்களைப்பற்றிச் சொல்லுகிறது.

கி. மு. 536 முதல் 333-ம் ஆண்டுவரை பாரசீகரிடம் கைதி செய்யப்பட்டுக் கிடந்த புராதன யூதர்கள் பாரசீக கோட்பாடுகளாகிய புண்ணிய கர்த்தா பாப கர்த்தாவென்னும் தெய்வ நியாயங்களை கைக்கொண்டனர். அரயனுவயஜோ வென்று சொல்லப்படும் பாரசீகர்களுடைய தெய்வலோகயாந்து [கிறிஸ்தவர்களுடைய] பழய ஏற்பாட்டில் (Old Testament) பூங்கா

வனமாகச் சொல்லப்பட்டது. ஐஸ்ரேயில் குடும்ப தெய்வமாகிய இலோகிம்யஹ்வா உலகத்தில் புண்ணியவாத்துமாவாகச் சொல்லப்பட்டது. யாஹ்வாவின் பழய வேலையாளாகிய சாத்தான் அஹ்ரிமானது துர்க்குணங்கள் பொருந்தி புதிய ஏற்பாட்டில் பிசாசு என்னும் நாமதேயம் பெற்றான். இந்தக் காலத்திற்றான் புராதன ஹீபுறு ஜாதியார் மோக்ஷம் நரகம் என்பதும் தேவதைகளென்பதும் பாரசீகரிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். அவர்கள் செத்த பிறகு தண்டனை யுண்டென்பதையும், ஆன்மாபிறகு உயிர்பெற்றெழு (Resurrection) மென்பதையும், லோகரட்சகருண்டென்பதையும் கைக்கொண்டார்கள். இவ்விதமாக நன்மை தீமை யென்பதன் கொள்கைகளைக் கைக்கொண்ட ஹீபுறு, கிறிஸ்து, மகமதிய மதஸ்தர்கள் கைக்கொண்ட பழய வழக்கங்களை யாராயலாம். பழய ஏற்பாட்டில் ஹீபுறு ஜாதியாரும், கிறிஸ்தவர்களும் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அவ்வளவு நம்பிக்கையும், புண்ணியத்திற்குத் தகுந்த பலனும், பாவத்திற்குத் தக்க தண்டனையும் உண்டென்று மகமதியர்களும் நம்பினார்கள். யேசு என்னும் கிறிஸ்துவின் வாக்குகளிலும் கூட பாவ புண்ணியம் வேறு என்றும் அதன் கர்த்தாக்கள் வேறு என்றும் அநேகமாகக் காணப்படுகிறது. உதாரணமாக "நன்மரம் கெட்ட பழம் கொடாது, கெட்ட மரம் நல்ல பழம் கொடுக்காது" (மத்தேயு VII 18) இந்த உபமானத்தால் யேசு நன்மையினின்றும் தீமையைப்பிரித்ததும்தவிர ஒருக்காலும் தீமை நன்மை பயவாதென்றும், நன்மை தீமை பயவாதென்றும் தீர்மானித்தார். "நற்பலனைக்கொடா மரத்தைவெட்டி அக்கினிக்கிரை யாக்கப்படும்" (மா VII. 19) என்று சொன்னபோது தீமையின் தண்டனையும் குறித்தார். நமக்கு கிடைத்த (மத்தேயு, மார்கு, லூக், மூவர்களின், சுவிசேஷத்திற்கூட யேசு தீமை செய்பவனுக்குத் தீயிலிடுவதே தண்டனையென்று நம்பியதாகத் தெரிகிறது. இது காலக்கிரமத்தில் நரகத்தீ என்னும் தற்கால ஞானமாக ஏற்பட்டது. யேசு பைசாசங்களிலும் எப்பொழுதும் தீமையே பொழுதுபோக்காக்கொண்ட சாத்தனிலும், பைசாசராஜனாகிய பீல்ஸபப்பிலும் நம்பினதாக ஏற்படுகிறது.

(மத் XII. 26-27) அஃதன்றியும் அவர் பரம்பொருளின் பரிசுத்த ஆவியால் பைசாசங்களை சிறையிட்டதாகவும் அதினின்றும் அவர் ஒருபோதும் தீமையை நினையாரென்றும் எண்ணினர்.

புது ஏற்பாட்டின் பிரகாரம், எல்லா வியாதிகளும், துன்பங்களும், அனுபவங்களும், குற்றங்களும், பாபமும் மற்றெல்லாக் கெடுதலும் கெடுதலைசெய்யும் சாத்தனது செய்கையென்று காணப்படுகிறது. அதில் சாத்தன், உலகத்திலே துஷ்கிருத்தியத்திற்கு பேர்போனவனுகையால் கண்காணிப்புள்ளவனுக ஏற்படுகிறது. அவன் இவ்வுலகத்தை யாள்பவனென்று சொல்லலாம், (ஜான் XII 31). சுருக்கமாக பேசு, பாரசீகமதம், ஹீபுறு மதம், கிறிஸ்தவமதம் மகமதிய மதங்களுக்கு ஒரு பெரிய ஊன்றுகோலென்று சொல்லலாம் இவ்வூன்றுகோலை நீக்கிவிட்டால் உலகத்திலேற்பட்ட "தீமைக்கு" காரணமேற்படாது.

(பின்னும் வரும்)

சோமசுந்திரதேசிகர்.

யோகம் (முன் தொடர்ச்சி.)

(d) **திதிக்ஷை** :— சீதம், உஷ்ணம், லாபம நஷ்டம் சந்தோஷம், துக்கம் முதலிய துவந்தங்களை சமமாய்ப் பார்த்து சந்தோஷானுபவத்தில் மிகவும் மூழ்காமலும் துக்கானுபவத்தில் வீணுய் சஞ்சலப்படாமலும் சமமாய்ப் பார்த்தலேயாம்.

(e) **சமாதானம்**:— சதா சஞ்சலித்துக் கொண்டிருக்கிற மனோவிர்த்தியை தன் சுவாதீனப் படுத்திக் கொண்டு அதையே அப்பியாசம் செய்து ஸ்திரப்படுத்துதல்.

(f) **சிரத்தை** :— சுருதி, ஸ்மிருதி, இதிகாசம், புராணம் இவைகளிலும் குருவினுடைய ஆப்த வாக்கியத்திலும் பூரணமான நம்பிக்கை வைத்தலே.

4. முமுக்ஷுத்துவம்:-அதாவது ஜனன மரணத்திற்கு ஏதுவான சம்சார பந்தத்திலிருந்து நிவர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்கிற தீவிர இச்சையாம். இந்த நான்கு சாதனங்களையும் அடைந்த ஒருவனுக்கும் "சாதன சதுஷ்டய சம்பன்னன்" "என்றும் வேதாந்த சாஸ்திரங்களை குரு முகமாய் அப்பியசிக்க அதிகாரம் பெற்றவன் என்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். இதைத்தான் வியாசபகவான் பிர்மசூத்திரத்தில் முதலாவதில் "அத" என்றதற்கு "பிறகு" என்று அர்த்தம். கிரந்தாரம்பத்தில் "பிறகு" என்று ஆரம்பித்ததினால் சாதன சதுஷ்டய சம்பன்னனான பிறகுதான் பிர்மசூத்திரத்தைப் படிக்க அதிகாரி என்று அவர் வற்புறுத்தி கூறியிருக்கிறார். இந்த அதிகாரி சமித்பாணியாய் சுரோத்திரியனாகிய பிர்மநிஷ்ட குருவை அடைந்து தண்டம்போல் அவரது உபயபாதங்களில் வணங்கி சம்சார பந்த நிவர்த்திக்கு ஏதுவாகிய சாந்தி பாடம் அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். அவரனுமதி மேல் எழுந்து அவருக்கு வேண்டிய சகல சிஷ்ருஷை செய்து அவருடைய கிருபையின்பேரில் உபதேசம் பெறலாம். முதலில் சிரவணம் அதாவது:—பிரஸ்தானத்திரயமாகிய உபநிஷத், பகவத்கீதை, பிர்மசூத்திரம், இவைகளின் பாஷ்யங்களை மேற்படிகுருமூலமாய் சிரவணம் செய்தல் பூர்வீக அனுஷ்டானப்படி தசசாந்தி படனம் செய்து தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் செய்துகொண்டு குருவந்தனம் செய்து குத்திட்டுக்கொண்டு கையில் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு குருவை பிரார்த்திக்கவேண்டும். குரு சொல்வதை மிக கவனமாய்க் கேட்டு மத்தியில் யாதொரு ஆக்ஷேபமும் சந்தேகமுமான கேள்விகளைக்கேழ்க்காமல் எல்லாம் சத்தியமென்று நம்பி பிராதக்காலத்தில் சிரவணம் செய்துகொண்டு வரவேண்டும்.

இரண்டாவது மனனம்:-அதாவது குரு உபதேசித்தவிஷயங்களைத் தான் தனியாய்ச்சிந்தனை செய்து அதை மனதில் ஸ்திரப்படுத்தி அடிக்கடி சிந்தனை செய்து பிறகு ஏதாவது சந்தேகமுண்டானால் குருவின் சாவகாசம் பார்த்து சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

மூன்றுவது நிதித்தியாசனம்:-அதாவது சிரவணத்திலும் மனனத்திலும் தான் கற்றதை தன்னுடைய சொந்த அனுபோகத்திற்கு வரும்படி ஏகாந்தமாய் தியானம் செய்யவேண்டும்.

நான்காது சமாதி:—இது இருவகைப்படும்.

(1) சவிகல்ப சமாதி (2) நிர்விகல்பசமாதி.

சவிகல்பசமாதியாவது திருபுடியுடன் கூடியது. அதாவது உபாசகன், உபாசிக்கப்படுகிற வஸ்து, உபாசனை என்று மூன்று பாவத்துடன் மனதை ஒரு முகப்படுத்தி அநேக காலம் ஒரே நிலையாய் தியானம் செய்தல்.

நிரவிகல்ப சமாதியோவென்றால் திருபுடியற்று பேதபாவனை யற்று ஒரே தன்மையாய்ப் பாலும் நீரும்போலும் புஷ்பத்தில் வாசனையிருப்பதுபோலும், பிரகாசவிளக்கில் உஷ்ணமிருப்பதுபோலும் எள்ளில் எண்ணெயிருப்பதுபோலும் கட்டையில் அக்கினி இருப்பதுபோலும் ஆகுதல். இதின் பரிபாகமே மோக்ஷம்.

மேற்குறித்த நான்குவித யோகங்களை அனுஷ்டிக்காமலும் கேவலம் மிருகங்கள் போல ஆகாரம் நித்திரை முதலியவைகளை மாத்திரம் புருஷார்த்தம் என்று நினைத்து வியாகரணசாஸ்திர மொன்றையே படித்த ஒரு மூடாத்மாவைக் குறித்து அடியிற் விவரிப்போம்:—

தட்சணத்திலே தாம்பிரபரணி தீரத்தில் கட்டைநாணு சாஸ்திரிகள் என்று ஒருவர் இருந்தார். அவர்பால்லிய முதற்கொண்டு வியாகரண சாஸ்திரமொன்றையே படித்து காலங்கழித்தவர். வேறு பாஷைகளை அறியாமல் அவைகளில் நிரக்ஷரகுக்ஷியாயிருந்தார். கிஸ்திப்பணம் கொடுத்து ரசீதை வாசிக்க அடுத்த வீட்டுக்காரனைக் கெஞ்சுவார். யோகக்ஷேமத்திற்கு அயலூர்களுக்குக் கடிதம் எழுதவேண்டுமானல் எதிர்வீட்டுக்காரனிடத்திற் போய் ஆசிரயிப்பார். ஆனல் மிகவும் அகம்பாவமுள்ளவர். வித்தியாகர்விஷ்டர். வியாகரணசாஸ்திர மொன்றையே பூராவாகப்படித்திருந்ததினல் அவருடன் சம்பாஷிக்க வருகிறவர்களிடமெல்லாம் சப்தங்களில் தோஷங் கற்பிப்பார். கிருஷ்ணு, கோவிந்தா, ராமா என்ற பதங்களுக்கு (Root) தாது இன்ன

தென்று யோசிப்பர்ரே யல்லது அவர்கள் சொரூபம் அறியார். ஆசார அனுஷ்டானங்கள் கோவில் தெய்வம் என்ற பக்தி ஒன்றும் இவருக்கு சுபாவீகமாகக் கிடையவே கிடையாது. சதா வியாகரணசாஸ்திரத்தைப் பிரசங்கிக்கவும் பெரிய ராஜ சமஸ்தானங்களிற் போய் உயர்ந்த வையாக்கரணி என பெயர் வாங்கி தோடா மெடல் பெற்று எல்லோரையும் அலக்ஷியஞ் செய்து கொண்டு திமிர்கொண்டவராய் தயிர்க்காரி முதலியவர்களுங்கூட இலக்கணத்திற்கு விரோதமாய் கத்துகிறுர்களென்று தோஷம் பார்ப்பவர். ஜன்மாந்திர புண்ணிய வசத்தினுலும் பிறருடைய நிர்பந்தத்திற்காகவும் சேதுஸ்நானஞ் செய்ய அவாக்கொண்டவராய் மிகவும் சிரமப்பட்டு சேதுக்கரை வந்து சேர்ந்தார். வயோதிசரானதினுலும் சம்ஸ்காரங்கள் விசேஷமாய் ஏற்படாததினுலும் தேகத்தில் வியாதி அதிக்கிரமிக்கவே அதற்கு வேண்டிய சிகிச்சை யொன்றுஞ் செய்யாமல் மரணம் சம்பவிக்கும்படியான தருணம் நேரிட்டு விட்டது. அப்போது தேகஉபாதி பொருக்க மாட்டாமல் "டுக்ரீம் கரணே" என்ற வியாகரண சூத்திரத்தை உறக்க ஒலமிட்டுக்கொண்டிருந்தார். ராமா, கிருஷ்ணு என்ற பதங்கள் இவர் நாவில் வரக்காரணமே இல்லாமற்போய்விட்டது இவர் நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கதன்ருே! அச்சமயத்தில் இவர் செய்த பூர்வஜன்மகர்மவிசேஷத்தால் ஷண்மதஸ்தாபகராயும் ஜீவகாருண்யமுள்ள அநேக சிடர்களால் சூழப்பட்டு பகவத்பாதாளான ஸ்ரீ சங்கராசாரிஸ்வாமிகள் அவ்விடம் வீற்றிருந்தனர். அந்த வையாக்கரணியின் சப்தம் அவர்களின் காதில் படஇன்று இதென்னை? ஒருஜீவன் அநியாயமாய்ப் போகிறதேயென்று நினைத்து அவர் பக்கத்தில் அணுகி, ஏ! துர்ப்புத்தியுள்ளவரே! நிர்யாணகாலம் சமீபித்திருக்க டுக்ரீங்கரணே என்கிற சூத்திரம் உம்மைக்காப்பாற்றுமா? கோவிந்தனை ஸ்மரியும் என்று அடியில் வரையப்பட்டிருக்கிற பன்னிரண்டு சுலோகங்களின் கருத்தை இந்த வையாக்கரணிக்கு உபதேசித்தார்.

1 ஏ, துர்புத்தியுள்ளவனே! பணத்தாசையை ஒழி. துராசையை நீக்கி சத்கருமத்தைச் செய். நல்ல வழியில் உனக்குக் கிடைப்பதைக்கொண்டு திருப்தியுள்ளவனுயிரு.

2. ஸ்திரீகளின் மார்பு பிரவேசங்களைப் பார்த்து மோகத்தையடையாதே. ஏனெனில் அது ரத்தமாமிசம் முதலியவற்ருல் உருவாக்கப்பட்டது. உன்மனது அதில் பற்றுவைக்கவேண்டாம்.

3. நம்முடைய உலக வாழ்க்கையானது தாமரையிலையில் ஒடிய நீர்த்துளிபோல் மிகவும் சஞ்சல முள்ளது. வியாதியாகிய அபிமானத்தினுல் உலகத்திலுள்ளவர்கள் துக்கத்தை அடைகிருர்களென்று நீ அறி.

4. எவ்வளவு காலம் வரை நீ திரவியம் சம்பாதித்துக்கொண்டிருக்கிருயோ அதுவரையில் சகல ஜனங்களும் உன்னைச்சூழ்ந்துக்கொண்டிருப்பார்கள். தேகம் இந்திரியங்கள் முதலியவைகளுக்கு கிழத்தனத்தால் அசக்தி யுண்டாக்குங்காலத்தில் வீட்டிலிருப்பவர்களுங்கூட உன்னை லக்ஷியம் செய்யார்கள்.

5. எவ்வளவு காலம் பிராண வாயுவினுல் நீ நடமாடிக்கொண்டிருக்கிருயோ அது வரையில் வீட்டிலுள்ள பந்துக்கள் உன்னுடைய க்ஷேமத்தைக் கோறுவதுபோல் நடிப்பார்கள். தேகத்தை விட்டு பிராண வாயு பிரிந்தால், ஏகாந்தவாசத்தைக்கோறிய உயிர்த்துணையாயிருந்த மனைவியுங்கூட பிணமென்று பயந்தோடுவாள்.

6. வாலிப அவஸ்தையில் விளையாட்டிலும் யௌவன அவஸ்தையில் ஸ்திரீலோலனுய் விஷயாதிகளிலும், வயது முதிர்ந்த காலத்தில் வீண் ஆலோசனைகளிலும் ஜனங்கள் காலத்தை வீணே கழித்து மரணம் அடைகிருர்களே தவிர பரமபதத்தையடையும் மார்க்கத்தை ஒருவரும் அடைகிறதில்லை.

(பின்னும் வரும்)

வி. நாராயணசாமிய்யர்,

புதுக்கோட்டை.

ஓம்.

புலியால் துறத்தப்பட்ட ஒரு ஸஞ்சாரி.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட பிரஜைகளுள் அநேக பேதங்களிருக்கின்றன. ஞானிகளாகச் சிலர் ப்ரஸ்தானத்திரயமென்ற பவக்கீதை, உபநிஷத்துகள்; பிர்ம சூத்திரம் என்றவைகளை வாசித்துக்கொண்டு "ஜகத்பொய், பிரம்மம், சத்தியம்", என்று பிறர்க்குமாத்திரம் வாக்ஜாலமாய் உபதேசம் செய்துக்கொண்டு தங்களுடைய சொந்த அநுபவத்திற்குக் கொண்டுவர, சிரமமடைகிறார்கள். பக்தர்களென்று சிலர் ஜால்ரா தம்புருவுடன் சில் காயர்களைச் சேர்த்துக் கொண்டு, பகவானுடைய திவ்விய நாமாக்களைச் சொல்லி கதை செய்வதும், நர்த்தனம் செய்வதும், அதிலே காலக்ஷேபத்தை செய்து கொண்டு வருகிறார்கள். பிறருக்கு பக்தியை உபதேசிக்கிறவர்களுக்கு தங்களிடத்தில் நிஜமான பக்தி இருப்பதாக அனுபவமில்லை. இன்னும் சிலர்கர்மடாளாய் நித்தியகர்மானுஷ்டானங்களையும், யெக்ய, யாகாதி, கிருதுக்களையும், ஆலயமுதலியவைகளை பிரதிஷ்டை செய்யவும்வியாஜமாக வைத்துக் கொண்டு பிரபுக்களிடங்களிற் சென்று யாசகம் செய்து சொற்ப பாகத்தைத் ஷை விஷயங்களுக்கும் மீதியை தங்கள் குடும்பஉபயோகத்திற்கும் வைத்துக்கொள்ளுகிறார்கள் மற்ற பெரும்பான்மையோர் உண்பதும் உடுப்பதும் குடும்ப சம்ரக்ஷணை செய்தும் கடைசியில் இறப்பதும் தான் புருஷார்த்தமென்று தங்களுடைய ஆசிரமத்துக்குக்கூட யோக்கியமில்லாத அநேக ஹீன விர்த்திகளைச்செய்து, அதாவது, அன்னவிக்கிறயம் (கிளப்) காபி ஹோடல், தன்னிலும் கீழ்ஜாதியாரிடம் கைகட்டி சேவக வேலை சேய்தல், இன்னும் இவ்விடம் எழுத இஷ்டமில்லாத அநேக அர்பத் தொழில்களைச் செய்து வயறு வளர்க்கிறார்கள். இவ்விதமாக மேற்சொன்ன நால்வகை மனிதர்களும் மிருகங்கள் போல விஷய சுகமென்ற ஆனந்தப்போல் காட்டுகிற பிரமையில் வாழ்நாட்களைகடத்திமரணமடைகிறார்கள். ஆனால் நாம் சகலமான பிராணிகளுக்குள் ஞானத்தை யடைந்திருக்கிற உத்தம சரீரமெடுத்தும் அதை வேண்டியபடி நன்குணர்ந்து; நாம் யார்?

எங்கு வந்திருக்கிறோம்? நாம் அடையவேண்டிய பரமபதத்தி ற்கு என்ன செய்துகொள்ள வேண்டுமென்பதை ஒருவரும் கவனிப்பதில்லை. ஆனால் எல்லோரும், நாம் ஆனந்தமாயிருக் கிறோம். நாம் சுகமாயிருக்கின்றோம் எனப் பிதற்றிக்கொண்டு திரிகிறார்கள். அவர்களுடைய ஆனந்தத்தைச் சற்று விசாரிப் போம். அந்த ஆனந்தம் சாசுவதமா? அது இகபர சாதகங் களுக்கு அனுகூலமானதா? என்று யோசிக்குமளவில், அனு பவத்தில் அப்படியல்ல. ஒரு விஷயானந்தத்தை அனுபவிக்குங் காலத்திலேயே அடுத்தநிமிஷத்தில் துக்கம்வரப்பேகிறதென்றும், அந்ததுக்கத்தைப் பிறகு அனுபவிப்பதும் எல்லோருக்கும் தெ ரிந்தவிஷயமே. அவ்வானந்தத்தின் நிஜஸ்வரூபத்தை அடியில் வரும் திருஷ்டாந்தத்தால் தெரிவிக்கலாமேயன்றி, எவ்வளவு சவிஸ்தாரமாய் எழுதினாலும் தெளிவாய் அறிவது கஷ்டம். அ ஃதாதெனின், ஒருவன் வனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கை யில் ஒரு புலிபக்கத்துப் புதரினின்று வெளியே பாய்ந்து அவனை த்துறத்தத் தொடங்கியது. இதற்குப்பயந்து அவன் ஓடவே இது வேகமாய்ப்பின்தொடர்ந்தது. தப்பித்துக்கொள்ளவேறுவழியொ ன்றும்தோன்றவில்லை. என் செய்வான்? பாபம்! வெகுதூரம் ஓட வே அங்கு ஒருபாழுங்கிணற்றைக்கண்டான். அதற்குள் ஒளித்துக் கொண்டால் புலிக்குத்தப்பலாமென நினைத்து ஜடிதியில் அப்பா ழுங்கிணற்றில் தொங்கிக்கொண்டிருந்த அருகம்வேர் ஒன்றை பிடித்து மெள்ள கிழே குதித்து விடலாமென்று நினைத்தான். கிழே பார்த்தாலோ, என்ன ஆச்சரியம்! ஒரு பெரிய சர்ப்பம் உக்கிரமாய் சீரிக்கொண்டு மேல்விழவருகிறது. மேலே போனால் புலி, கிழே குதித்தால் சர்ப்பம், என்னசெய்வான்? அதுவும்போறா க்குறைக்கு பற்றித்தொங்கிக்கொண்டிருக்கும் அருகம் வேரை அங்கொரு வளையிலிருந்த எலி ஒன்று அறுக்கத்தொடங்கிற்று. இத்தருணத்தில் அந்தக்கிணற்றின் ஓரத்தில் வைத்திருந்த தேன் ராட்டியிலிருந்து ஒரு துளித்தேன் இவன் நாக்கில் விழுந்தது. அப்போது அவன் இருக்கும்நிலையை உணராமல் "ஆகா! என்ன ருசி? நிரம்பவும் ஆனந்தமாயிருக்கின்றது" என்றுசொல்லி அவன் அடைந்த ஆனந்தத்திற்கும் இப்பொழுது நாம் ஆனந்தப்படுகிற தாகச் சொல்லுகிற ஆனந்தத்திற்கும் யாது வித்தியாசம்? நண்

பார்களே! சற்றுகவனித்து மெய்ஞ்ஞான ஆனந்தத்தை அடைவீர்களாக,

ஓம் தத் ஸத்.

C. NARAYANASAMI IYER
of Madura Branch.
T. S.

௨

ஹிந்துமத தத்துவங்கள்.

(177-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ஒவ்வொரு தர்சனத்திற்கும் ஒரு ரிஷி ஆசாரியர். அந்த ரிஷிகள் தர்சனத்தின் தாத்பரியங்களை சூத்ர ரூபமாக அமைத்து அதற்கு பாஷியங்களும் செய்திருக்கிறார்கள். மேற்படி சூத்திரங்களும் பாஷியங்களும் தர்சனங்களுக்காதாரமானவைகள். துக்கத்திற்குக் காரணமான மித்யாஞானம் நிவிருத்தியானவுடன், ஆநந்தம் அனுபவிக்கப்படுகிறதாதலால் நியாய சாஸ்திரம் தன்னுடைய முடிவை விடுதலையென்று சொல்லுகிறது. அதற்குத்தான் புருஷார்த்தம் அல்லது மோக்ஷம் என்று சொல்லப்படுகிறது. நியாய சாஸ்திரத்திற்கு ரிஷி கௌதமர். அவருடைய சூத்திரங்கள் ஐந்து வகுப்புடையன. அவைகளுக்கு வாத்ஸ்யாயனர் பாஷியம் செய்திருக்கிறார். அந்த சாஸ்திர ஞானத்தை பதினாறு விஷயங்களாக வகுத்து லக்ஷணங்களை எடுத்துக்காட்டியிருக்கிறார். முதல் முதல் பிரமாணத்தைப்பற்றி நிரூபணம் சொல்லிருக்கிறார். பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம், சப்தப்பிரமாணம் முதலியவைகளால் பிரமேயம் அறியவேண்டியது. பிறகு யுக்தி, சித்தாந்தம், விதண்டவாதங்கள் முதலியவைகளைப்பற்றி விவரித்து இருக்கிறார். சத்தியமான அறிவினால் மித்யாஞானம் விலகுகிறது, பிறகு மனிதன் பந்தநிவிருத்தியை அடைகிறான்.

வைசேஷிகம்:— இது விசேஷணங்களைப்பற்றிய நூல். இதற்கு ரிஷி கணாதர். பெயரிடக்கூடிய சகல வஸ்துக்களையும் ஆறு

வகுப்பாய் பிரித்திருக்கிறார். அவைகளாவன:— (1) திரவியம் (2) குணம், (3) கருமம், (4) சாமான்னியம், (5) விசேஷம் (6) ஸமவாயம், (பதார்த்தஸம்பந்தம்.)

சாங்கியம்:— அதாவது எண்ணிக்கை சம்மந்தமான சாஸ்திரம். இதற்கு கபிலர் சூத்திர கர்த்தாவெனச் சொல்லப்படுகிறார். சாங்கியம் முக்கியமாய் சிருஷ்டிக்கிரமம் எத்தன்மை என்றதைப் பற்றியது. அது நிரீச்வரமதமாக அடிக்கடி சொல்லப்பட்ட போதிலும் அந்த மதத்தின் கோட்பாடுகளில் ஈசுவரன் இல்லை என்ற பிரஸ்தாபமில்லை. அதற்கு சுருதியே மேலானப்பிரமாணமாகையால் நாஸ்திக மதத்தின் கொள்கை இல்லை யென்பதை ரூபிக்க அத்தாக்ஷியாகிறது. முக்கியமாய் புருஷன், பிரகிருதி அவைகளின் பாவங்கள், பிரிவுகள் முதலியவற்றைப்பற்றி தெரிவிக்கிறது.

யோகசாஸ்திரம்:— அதாவது பிரயத்தன ரூபமாய் ஈசுவர சாயுஜ்யத்தையடையும் மார்க்கத்தைப்பற்றியது. இதற்குச்சூத்திர கர்த்தா பதஞ்சலி மகாரிஷி. பாஷிய கர்த்தா வியாஸர். யோக சூத்திரங்கள் 198. அவை நான்கு பாதங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் முக்கிய தாத்பரியமாவது சஞ்சலமுள்ள சித்தவிருத்தியைத் தடுத்து அதன்மூலமாய் மனம் சமாதானநிலைமையையடைந்து பிறகுகடைசியாய் பிரகிருதிசம்மந்தத்திலிருந்து புருஷனை வேறுபடுத்தல், அதாவது கைவல்லியத்தை யடைதலாம். இடையில் சில பாதங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிற சித்திகளைப்பற்றி அடைய ஒருவன் பிரயத்தினப்பட்டால் அது மோக்ஷமார்க்கத்திற்கு விருத்தமாதலால் அதை அபேக்ஷிப்பது அயுக்தமாகும்.

மீமாம்சை, வேதாந்தம் இரண்டும் சேர்ந்து மீமாம்ஸா சாஸ்திரமென்று சொல்லப்படுகின்றன, ஏனென்றால், அவ்விரண்டும் வேதவாக்கியார்த்த நிரூபண சம்பந்தமான விதிகளைப்பற்றி முக்கியமாய் பிரவிருத்திக்கின்றன. பூர்வ மீமாம்சைக்குத்தான் மீமாம்ஸையென்று பெயர் வழங்குகின்றது. அதற்கு ஜைமினி சூத்திர கர்த்தா; சபரர் பாஷியக்காரர். அது யெக்யங்கள், ஹவ்ய கவ்வியங்கள் முதலிய கிருத்தியங்கள் அடங்கிய

வேதத்தின் கர்மகாண்டத்தைப்பற்றி பிரவிருத்திக்கிறது. உத்தர காண்டம் (பிற்பட்ட மீமாம்ஸையோ) பிர்ம்மஞ்ஞான காண்டத்தைப்பற்றியது. பூர்வ மீமாம்ஸை பன்னிரண்டு அத்தியாயங்களாகப்பகுக்கப்பட்டிருக்கிறது. பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம், அர்த்தாபத்தி, சாப்தம்ஆகிய ஐந்து பிரமாணங்களைப் பற்றி விசாரிக்கப்படுகிறது. வேதம் அபௌருஷமென்றும் அதுதான் பிரமாணமென்றும் ஜைமினி சித்தாந்தம் செய்திருக்கிறார்.

உத்தர மீமாம்ஸையாகிய வேதாந்ததர்சனமானது இப்பொழுது மதத்திரயங்களாகப் பிரசித்திபடைகின்றது. அதன் சூத்திரங்களுக்கு பிரம்ம சூத்திரமென்று பெயர். அதற்கு வியாஸர் கிரந்த கர்த்தா.

மதத்திரயங்களாவன:— (1) அத்வைதம், (2) விசிஷ்டாத்வைதம், (3) துவைதம் அவைகளுக்கு முறையே சங்கரர், இராமாநுஜர், மத்வர், முதலியவர்கள் பாஷிய கர்த்தாக்கள்.

(பின்னும் வரும்.)

பத்திராதிபர்.

ஓம், தத், ஸத்.

வெள்ளையானைக்கு பாபவிமோசனம்.

சிவபெருமான்.

வென்றுளே புலன்களைந்தார் மெய்யுணருள்ளந்தோறுஞ்
சென்றுளே யமுதமூற்றுந் திருவருள்போற்றி யேற்றுக்
குன்றுளேயிருந்து காட்சிகொடுத்தருள்கோலம் போற்றி
மன்றுளே மாறியாடு மவைச்சிலம்படிகள் போற்றி,

(இதன்பொருள்.)

உட்புலனைந்தையும் வென்று நீக்கினவர்களுடைய உண்மையை யுணர்ந்த உள்ளந்தோறுஞ் சென்று அவர்கள் அறிவினில்

பேரின்பமாகிய அமுதத்தைச் சொரிகின்ற திருவருளுக்கு வந்தனம், வெள்ளிமலை போன்ற ரிஷபவாகனரூடராய்வந்து தரிசனங் கொடுத்தருளுகிற திருவருட் கோலத்திற்கு வந்தனம், வெள்ளியம்பலத்தில் மாறியாடிய வேதமாகிய சிலம்புகளையணிந்த திருவடிகளுக்கு வந்தனம்.

(திருவிளையாடற்புராணம்.)

அண்டசராசரங்களுக்கு எல்லாம் சிருஷ்டி ஸ்திதி கர்த்தாவாய் சகலகுணரகிதராய் ஆபத்பாந்தவராய் அடியார்க்கடியராய் ஸகல ஜீவகாருண்ணியராய் சகல ஆன்மாக்களும் சம்ஸாரபந்தமற்றுத் தன்னை யடையும்பொருட்டு தன்னுடைய அநந்த குண திருவிளையாடல்களைச் செய்து சகல ஜனங்களுடைய மனதையும் கவர்ச்சி செய்துகொண்டு சச்சிதாநந்த ஸ்வரூபியாய் விளங்கும் சாக்ஷாத் பரமசிவன் பாண்டியநாடாகிய மதுராபுரியில் செய்த திருவிளையாடல்களில் ஒன்றாகிய வெள்ளை யானைக்கு சாபந்தீர்த்த விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்படும்.

முக்திக்ஷேத்திரமாகிய காசியென்னும் திருப்பதியில் துருவாச மகா முனிவர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜைசெய்து துதித்துக்கொண் டிருக்குங் காலத்தில் சாக்ஷாத் பரமசிவன் உருக்கத்துடன் தன்னைத் துதித்து தியானித்துக் கொண்டிருக்கிற துருவாசரிடம் கிருபைகூர்ந்து தனது சிரவிலிருந்த ஒருதாமரை மலரை விழச்செய்ய அதையுடனே தனது யிரண்டு கைகளையும் விரித்துத் தாங்கிக்கொண்டு தன் கண்களிலும் மார்பிலும் ஒத்தி ஆனந்தித்துக்கொண்டிருந்தார். பிறகு அங்கிருந்து தேவலோகஞ் சென்றபொழுது தேவேந்திரன் அசுரரைக்கொன்ற ஸந்தோஷத்தால் அதிகுதூகலத்துடனும் ஆரவாரங்களுடனும் ஊர்வலம் வந்து கொண்டிருக்கும்பொழுது துருவாசர் அவ்விந்திரனுக்கு ஆசீர்வாதஞ்செய்து தமது கையிலிருந்த தாமரை மலரை நீட்ட இந்திரன் அளவிறந்தசெல்வச்செருக்கால்மதியாமல் ஒருகையை நீட்டி அதை வாங்கி மதயானைத் தலைமேல் வைத்தான். அந்த யானையானது அதை யெடுத்துத் தள்ளிக் காலால் கசக்கித் தேய்த்தது. உடனே துருவாச முனிவர் சிவபிரானது மலரை யிவ்வளவு அலட்சியமாய் கிரகித்து வீண் செய்ததற்குத் தக்கபடி இந்திரனை

நோக்கி "ஹே இந்திரா! உன் தலையானது பாண்டியரில் ஒருவன் வளையால் உடைபடக் கடவதென்று சபித்தார். தவிரவும் நான்கு கொம்புகளையுடைய" உனது வெள்ளையானையும் காட்டானையாகக் கடவதென்றும் சாபங்கொடுத்தார். உடனே தேவர்கள் அவனை வணங்கி அந்த சாபத்திற்கு விமோசனம் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க மனமிரங்கி அந்தக் காட்டானையானது நூறு வருஷங்கழித்து பழைய வடிவாகத் தக்கதென்றார்.

பிறகு அங்கிருந்த வெள்ளையானை தேவலோகத்தைவிட்டு மதிகலங்கி மண்ணுலகத்தில் வந்து காட்டானைகளோடு வஸித்து நூறு வருஷஞ் சென்றவுடன் சாப விமோசன காலத்தில் அக்காட்டில் நெருங்கிய தெய்வீகமான கடம்பாவனத்தில் வந்து பரமசிவனது அருட்பெருக்கால் பொற்றாமரைத் தீர்த்தத்தைக் கண்டவுடன் அதில் தன்பழைய அறிவு தோன்றிற்று. உடனே அதில் முழுகியவுடன் பழையவடிவம் பரமசிவனது கிருபா நோக்கமுந் தோன்றி பரமானந்த வடிவமாகிய சிவலிங்கமும் எதிரில் தோன்ற உடனே ரொம்பவும் வணங்கி தனது துதிக்கையால் தண்ணீர் மொண்டு வந்து திருமஞ்சனஞ் செய்து சிரத்தையாய் பூசித்தது. அதன் அன்பையும் பக்தியையு மறிந்த பரமசிவன் பிரஸன்னமாகி "நீ வந்த காரியமென்ன வென்று வினவ தனது பூர்வகவரலாற்றைச் சொல்லி இனி உமதடியைப் பிரியாது உமது சந்நிதானத்தில் இந்த விமானத்தை முதுகிற் சுமக்கவேண்டுமென்றன்பு எனது உள்ளத்தில் தோன்றுகிறபடியால் அப்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தது." அதற்கு பரமேசுவரன் நம்மிடத்தில் மிக்கவன்புள்ள தேவேந்திரனைத் தாங்குவதே நமக்கு ரொம்ப திருப்தியையுண்டு பண்ணத்தக்கதென்றார். உடனே அந்த வெள்ளையானை பரமசிவனிடம் விடைபெற்றுக்கொண்டு அங்கிருந்து சற்று மேற்றிசை நோக்கி தன்பேரால் ஒரு தடாகமும் அதன்பக்கத்தில் சிவலிங்கத்தையும் கணேசனையும் பிரதிஷ்டைசெய்து அவற்றை அர்ச்சித்துக்கொண்டிருக்கும்பொழுது இந்திரனால் அழைக்கப்பட்டு அங்கு சென்று தனது வரலாற்றைத் தெரிவித்து சுகமாக வாழ்ந்திருந்தது.

நண்பர்காள்! யாராயினும் உள்ளன்போடு ஆராதித்தால் பரமசிவன் கிருபை செய்கிறார் என்பதைத் தெரிந்து தக்கபடி நடவுங்கள்!

ஓம் சுபம். (பத்திராதிபர்)

பிராதஸ்நானவிதி.

(235-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

நாம் தோய்த்த வஸ்திரத்தைத் தான் கட்டிக்கொள்ளல் வேண்டும். வண்ணான் உடை புது உடைமுதலியவைகள் கர்ம காலத்திற்கு கூடவேகூடாது. மற்றவேளைகளில் தரிப்பதும் சிலாக்கியமன்று. கச்சையிடாதவன், நூலைக் கச்சைதட்டுபவன், மேல் உத்தரீயமில்லாதவன் இவர்கள் எக்கருமங்களுக்கும் அநதிகாரிகள். அழுக்கு வஸ்திரம் ஈரத்துணி எரிந்ததுணி முதலியன கட்டிக்கொள்பவர்கள் உடையில்லாதவர்களுக்கு ஸமானர்களாவர். வஸ்திரம் தரித்துக்கொள்ளும்பொழுது உத்தரீயத்தை தலையிற் சுற்றிக்கொள்ளுதல் வேண்டும்.

உடையைத் தரித்தவுடன் கால்களைக்கழுவி ஆசமனஞ்செய்யவேண்டும். நதியிருக்குமிடத்து மற்ற நீர்களில் ஸ்நாநஞ்செய்தலாகாது. சூத்திரர்கள், ஸ்திரீகள், நாஸ்திகர், பாஷண்டர், குழந்தைகள், வியாதியாளர் இவர்களுடன் சேர்ந்து ஸ்நாநஞ்செய்தல் கூடாது. ரோகிகள் வெந்நீரில் தான் ஸ்தானஞ்செய்யவேண்டும். சலத்தில் ஸ்நாநஞ்செய்ய சக்தியில்லாதவர்களும் வெந்நீரில் ஸ்நானஞ்செய்யலாம். நித்தியகர்மங்களுக்குள் "ஒவ்வொரு தினம் ஸ்நாநஞ்செய்தல்" அவசியமான தென்றே சொல்லப்படுகிறது. சுத்தமானதாயினும் அசுத்தமானதாயினும் தேவாலயங்களில் அருகிலுள்ள தீர்த்தம் கங்கைக்கு சமானமானதால் அதில் ஸ்நாநஞ்செய்தல் சகல பாவங்களையும் நீக்கும் என்றும் அப்படி ஸ்நாநஞ்செய்ய சக்தமில்லாதவர்கள் இடுப்புவரையிலாவது ஸ்நாநஞ்செய்யவேண்டுமென்றும் அதற்கு முடியாவிட்டால் ஈரத்துணியாலாவது துடைத்துக்கொள்ளவேண்டுமென்றும் பிறகுவேத மந்திரங்களால் தீர்த்தத்தை புரோக்ஷணைசெய்துகொள்ளவேண்டுமென்றும் அல்லது கடவுளை தியானஞ்செய்யவேண்டுமென்று அவ்வாறு தியானஞ்செய்வதே மானஸஸ்நாநமென்றும் அநேகஸ்நாநங்களுக்குள் மானஸஸ்நாநமே சிரேஷ்டமென்றும் "கௌதமர், யாஞ்ஞவல்கியர் அபிப்பிராயமெனத்தெரியவருகி

றது. சண்டாளர் முதலாயினோரைத் தீண்டினும் உடனே ஸ்நானஞ்செய்தல்வேண்டும். அப்படிதீண்டினவனை மற்றொருவன் புத்திபூர்வமாய்த் தீண்டினால் அவன் ஸ்நானஞ் செய்யவேண்டும். இல்லாவிடின் ஆசமனம் செய்தல்போதுமானது. ஜாதிப்பிரஷ்டர்களுக்கு 8 அல்லது 9 அடியும் மாதவிடாயுள்ள மாதர்களுக்கு 18 அல்லது 16 அடியும் பிரசவித்தஸ்திரீகளுக்கு 27 அல்லது 24 அடியும் சண்டாளருக்கு 36 அல்லது 32 அடியும் ஒதுங்கிச்செல்லவேண்டும். இதற்குட்பட்டால் ஸ்நானஞ்செய்தல்வேண்டும்.

சண்டாளரன்றி மற்றவர்களை அசுசியுள்ளகாலத்தில் தீண்டினாலும், எக்கருமம் செய்யுங்காலத்திலும் போஜனகாலத்தும் பூனையின்வாலைத் தொட்டாலும் அப்பொழுது ஸ்நானஞ் செய்யவேண்டும். இரவில் ஸ்நானஞ் செய்தல் ஜலம் உட்கொள்ளுதல் இவையெல்லாம் தீபத்தின் முன்பாகவேசெய்யவேண்டும். சுபாகன் சண்டாளன் இவர்களின் நிழல்பட்டால் ஸ்நானஞ்செய்யவேண்டும். நாற்பது அடிக்கு மேற்பட்ட நிழல்பட்டால் ஸ்நானஞ்செய்யவேண்டுவதில்லை. தம்க்கு மக்கள் பிறந்தகாலத்தும் கிரகணகாலத்தும் இராக்காலமாயினும் ஸ்நானஞ் செய்யவேண்டும். கண்ணோய் முதலிய சில வியாதிகள் ஒருவனைப் பார்த்த காலத்தும் தொட்டகாலத்தும் ஒட்டிக்கொள்வதுபோல சுத்தி அசுத்திகளும் ஒருவர் சரீரத்திலிருந்து மற்றொருவர் சரீரத்திற்கு வரும். ஆகையால் ரொம்ப அசுசியுள்ளவர்களிடம் சேருதல் கூடாது. அதிலும் பிறப்பினாலும் குடியினாலும் கேவலம் கெட்ட ஆகாரங்களை புசிப்பதாலும் சண்டாளர்கள் தூரத்திலேயே இருப்பதற்கு அருகராகினார்கள். தண்ணீரில் ஸ்நானஞ்செய்தலும், புரோக்ஷித்தலும் சலத்தைத் தொட்டு மந்திரித்தலும் தண்ணீரை நோக்கி அகமர்ஷண மந்திரத்தை மும்முறை ஜெபித்தலும் ஸ்நானமென்றே பெரியோர்கள் அபிப்பிராயம். கிரகணகாலத்தில் ஸ்நானஞ்செய்யாதவனுக்கு ஏழுஜன்மம்வரையில் நோயுண்டாமென்றும் ஆதலால் அக்காலத்து ஸநானஞ் செய்தல் யாவர்க்கும நித்தியாவசியகமென்றும்பெரியோர்கருத்து. மாகமாசத்தில் விடியற்காலத்தில் செய்யும்ஸ்நானம் பாபத்தைப்போக்கும். பரலோகத்தைப்பெறுவான். சோமவாரம் சனிவாரம் புதவார்ங்ககளில் எண்ணெயிட்டுக்கொள்ளல்வேண்டும். சங்கிரமணம், யதீபாபதம், ஜென்மநக்ஷத்திரம், ஏகாதசி, சதுர்த்த

சி, அஷ்டமி, பிரதமை, சஷ்டி, பர்வகாலங்கள் முதலியவைகளில் எண்ணெயிட்டுக்கொள்ளலாகாது. காலையில் எண்ணெயிட்டுக்கொள்ளுதல் ஆகாது. நரகசதுர்த்தசியன்று இரவில் நரகாசுரன் கொல்லப்பட்டான், ஆதலால் நரகப்பயமுள்ளயாவரும் அந்த சதுர்த்தசி யன்று உதயத்திற்குமுன் அப்பியங்க ஸ்நாநஞ் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தயிலத்தில் இலக்ஷிமியும் சலத்தில் கங்கையும் அத்தீபாவளி தினத்தில் வசிக்கின்றார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் முக்கிய கருத்து, மோக்ஷத்திற்கு விரோதிகளான ராகத்துவேஷாதிகள் ஆசாபாசங்கள் முதலிய அசுரகுணங்களை எப்பொழுது ஒருவன் கொன்றானோ அப்பொழுது தான் சம்சார பயமில்லாமல் சந்தோஷித்து மேலான மோக்ஷவழிக்கு லாயக்குள்ளவனாகிறான். கடுகெண்ணெ, வாசனை வஸ்துக்கள் கலந்த எண்ணெ, புஷ்பங்கள் சேர்ந்த எண்ணெ, மருந்தெண்ணெ இவைகட்கு எக்காலத்தும் குற்றமில்லையென்றும் தெரியவருகிறது. கிரகணகாலம் தவிற மற்றகாலங்களில் பிணியெண்ணெக்கு தோஷமில்லை யெனத்தெரியவருகிறது- தவிர; ஞாயிற்றுக்கிழமையில் வெப்பத்தையும் வியாழக்கிழமையில் புல்லையும் வெள்ளிக்கிழமையில் கோமயத்தையும் செவ்வாயில்மண்ணையும் கலந்து தைலமிட்டுக்கொள்ளல் வேண்டும். யாத்திரை செல்லுங்காலத்திலும் மரணசௌசகாலத்திலும் தைலம்தேய்த்துக்கொள்ளலாகாது. புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநஞ்செய்தால் அநேகபாவங்களைப் போக்கும். இனிபுண்டரத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப்படும்.

(பின்னும் வரும்)

(ப—ர்.)

ஓம், தத், ஸத்.

ஸ்ரீ கண்ணப்பிரானும், பிராமணபத்நிகளும்.

யமுனாநதிக்கரையில் சகல கோபாலகோகண சமேதராய் வந்து அந்நதியின் சமீபத்தில் ஓர் குளிர்ந்ததோப்பில் சஞ்சரித்

துக்கொண்டிருந்த ஸ்ரீ பலராமகிர்ஷ்ணர்களைப்பார்த்து அந்த கோபாலர்கள் ரொம்ப பசியால் வருந்தி தங்களுக்கு அந்தப்பசியை சமனர்செய்து இரட்சிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான் அதற்கருகாமையில் நெருங்கிய காட்டில் கம்ஸனுக்கு பயந்துப் ஸ்வர்க்கத்தை யபேட்சித்தும் இரகஸியமாய் யாகஞ்செய்துகொண்டிருக்கிற பிர்மம் நிஷ்டர்களின் பத்நிகள் தன்னிடத்தில் வைத்திருக்கும் அத்தியந்தம் பத்திக்குத்தக்கபடி யவர்களை கிருதார்த்தர்களாகச்செய்ய வேண்டுமென்று எண்ணி, அந்த கோபாலர்களைப்பார்த்து பிராம்மணர்கள் செய்யும் யாகசாலையிற் சென்று நாங்கள் பசியால் வருந்துகிறோமென்பதைத் தெரிவித்து அன்னம் சம்பாதித்துவாருங்கள் என்றுசொன்னர். அதைக்கேட்டகோபாலர்கள் அந்த யாகசாலையிற் சென்று பிராமணர்களை நோக்கி "ஹே பிராமணோத்தமர்களே! சமீபத்திலுள்ள ஓர் தோப்பில் பலராமகிர்ஷ்ணரிருவர்களும் நாங்களும் பசியால் வருந்துகிறோம். எங்கள் பசியை நீக்கி ரட்சிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, ராமகிருஷ்ணருடைய மகிமையைத் தெரிந்துகொள்ளாத பிராமணர்கள் சூத்திரர்களுக்கு அன்னம்போடலாகாதென்று மருத்தவசனத்தை கண்ணபிரானிடம் தெரிவிக்க அவர் பிராமணர்களுடைய பத்நிகளிடம்சென்று விருத்தாந்தத்தைச் சொல்லுங்களென்று சொல்லகோபாலர்கள் அதேவிதமாய்த் தெரிவித்தார்கள்.

உடனே பதிவிருதாசிரோன்மணிகளாகிய அந்த பிராமண பத்நிகள் பலராமகிருஷ்ணருடைய நாமத்தையும் அவர்கள் பசியால் வருந்துகிறார்களென்ற விஷயத்தையும் காதிற்கேட்டவுடன் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடமுள்ள அத்தியந்தப் பிரியத்தால் அவர்களுக்கும் பின்னும் சகல கோபாலர்களுக்கும் அநேக மாதுர்யமானபட்சியங்கள் போஜ்ஜியங்கள், வகைவகையான அன்னங்கள் நானுவிதமான பழ வகைகள் சகிதமாய் சகல பிராமண பத்நிகளும் தயார்செய்து எடுத்துக்கொண்டு போக பிரயத்தனப்படுகையில் தங்கள் பர்த்தாக்கள் சாஸ்திரவிருத்தமாய் சூத்திரர்களுக்கு அன்னமிடக் கூடாதென்றும் பர்த்தாக்களுடைய கட்டளையை

மீறி பதிவிர்தாஸ்திரீகள் நடக்கக்கூடாதென்றும் அவ்வாறு அவர்கள் செய்தல் அவர்களுக்கு பாபத்தையுண்டுபண்ணுமென்றுஞ் சொன்னார்கள்.

இதைக் கொஞ்சங்கூட லட்சியஞ்செய்யாது ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்திலுள்ள அன்பினால் சகலவித ஆகார வகைகளையுந் தூக்கிக்கொண்டு கிருஷ்ணனிடஞ்சென்று யாவற்றையும் சமர்ப்பித்து நமஸ்காரஞ்செய்து பிரார்த்தித்து வணங்கி நின்றார்கள். உடனே ஸ்ரீ கிருஷ்ண பகவான் தன்னிடம் அத்தியந்தம் பக்தியுடன் தன்னை தெரிசிக்க வந்திருக்கும் பிராமண பத்நிகளை நோக்கி அவர்கள் க்ஷேமசமாசாரங்களை விசாரித்துப் பிறகு அவர்களிடம் கிருபை பூண்டவராய் ரொம்ப சந்தோஷமடைந்து அவர்கள் சமர்ப்பித்த நிவேதனத்தால் திர்ப்தியடைந்து அவர்களுக்கு சகல புருஷார்த்தங்களு முண்டாகட்டுமென்று ஆசிர்வாதம் செய்து பின்னும் எந்த வரம் வேண்டுமென்றாலுமதைக் கேட்கலாமென்று சொல்ல அந்த பிராமண பத்நிகள் கிருஷ்ணபகவானைக் குறித்து, சுவாமி! தங்களை தர்சனம் செய்ததே எங்களுக்கு ரொம்ப க்ஷேமகரம், இனிதங்களுடைய சேவையை நாங்கள் பிரார்த்திக்கிறோம். தங்கள் சரணாரவிந்தங்களையடைய வேணுமென்ற அத்தியந்த பிரீதியைத்தவிற வேறு ஒன்றும் விரும்புவது இல்லை யென்று சொன்னார்கள். இதைக் கேட்ட பகவான் "நீங்கள் அபேட்சிக்கிறபடி உங்கள் மனோபீஷ்டங்களை நிறவேற்றுகிறேன். ஆனால் நீங்கள் உங்கள் புருஷர்களிடஞ்சென்று யாகத்திற்கு சாதகமாய் ஆகவேண்டிய காரியங்களைப் பூர்த்திசெய்து எப்பொழுதும் உங்களுடைய பரிசுத்த மனதை யென்னிடம் சமர்ப்பித்துவிட்டிருங்கள். கட்டாயம் என்னையே யடைவீர்கள். ஆகையால் உங்கள் கிராமங்களுக்குச் செல்லுங்களென்றார்.

அந்த ஸ்திரீகள் தங்களுடைய பர்த்தாக்களின் வார்த்தையை மீறி தாங்கள் கண்ணபிரானை தரிசிக்க வந்ததினால் தங்களை யவாகள் அங்கீகரிப்பார்களோ மாட்டார்களோ வென்றசங்கை தோன்ற பகவான் அதையறிந்து உங்களைக் கண்டமாத்திரத்தில் ரொம்ப அன்புடனும் பக்தியுடனும் உங்களிடம் வசிப்பார்களென்

றும் அந்த பிராமணர்கள் மேன்மேலும் பக்தியதிகரித்து நல்ல ஸ்திதிக்கு வருவார்களென்றுஞ் சொன்னார்.

அதைக்கேட்டு அந்த ஸ்திரிகளும் ஸ்ரீ கிருஷ்ணபகவானை நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் கிரகத்திற்குச் சென்று எப்பொழுதும் ஸ்ரீ பகவானுடைய குணாதிசயங்களையும் நாம கீர்த்தனங்களையுமேஸ்மரித்துக்கொண்டு தியானித்து வந்தார்கள்.

ஆகையால், நண்பர்களே! சூத்திரர்களாயிருந்தாலும் ஸ்திரீகளாயிருந்தாலும் யாராயிருந்தாலும் ரொம்ப பக்தியுள்ளவர்களுக்கே பகவான் கிருபைசெய்து க்ஷேமத்தைக் கொடுக்கிறார் என்ற விபரத்தை எப்பொழுதும் மனதில் வைப்பீர்களாக!

ஓம் சுபம். (ப—ர்)

தீபாவளி.

இந்த பண்டிகையானது இந்தியாவிலுள்ள சகல ஜனங்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இப்பண்டிகை யேற்பட்டதற்குக்காரணம் சைவர்கள் ஒருவிதமாயும், வைஷ்ணவர்கள் மற்றோர் விதமாயுஞ்சொல்லுகிறார்கள்.

ஓர் காலத்தில்தேவதைகள் நரகாசுரனென்றகொடிய ராட்சதனால் இம்சை செய்யப்பட்டு வந்ததாயும் தேவர்கள் ஈசுவரனிடம் முறையிட, கருணாநிதியாகிய மஹேசுவரன் தனது பக்தர்களாகிய தேவதைகளை இரட்சிக்கும்பொருட்டு தனது குமாரன் சுப்ரமணியக்கடவுளையனுப்ப, உடனே அவர் சென்று அந்த அசுரனை யுத்தத்தில் முறியடித்து தேவதைகளை இரட்சித்ததாயும் அதுமுதல் ஹிந்துக்கள் அந்த தினத்தை உத்சவ தினமாய்க் கொண்டாடுவதாயும் சிவனடியார்களின் தாத்பரியம்.

நரகாசுரனென்ற இராட்சதன் கிருஷ்ண பகவானுடைய 1,600 கோபிகைகளை சிரையிலடைத்ததாயும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸத்தியபாமாவோடு சென்று இவ்விராட்சதனைக் கொன்று கோபிகளை சிறையிலிருந்து விடுவித்ததாயும் உடனே அவர்கள் வீடுகள்தோறும் விளக்குகள் ஏற்றியும் குதோஹலித்தும் அவனைக் கொன்ற நேரத்தில் விருந்துண்டு வந்ததாயும் அதுமுதல் அப்பண்டிகைக் கொண்டாடப்பட்டு வருகிறதென்றும் வைஷ்ணவர்களுடைய தாத்பரியம்.

இதற்கு தத்துவார்த்தமில்லாமலிருக்கவில்லை. சுப்பிரமணியன் அல்லது கார்த்திகேயர் ஆத்மஞானத்துக்கும், தேவதைகள் ஸத்துவகுணத்திற்கும் ராட்சதன் மனிதனுடைய கெட்ட குணங்களுக்கும் இரவு அகங்காரத்திற்கும், வெளிச்சங்கள் ஸ்வஞ்ஞானத்திற்கும் வாணங்கள் பட்டாஸ்க் கட்டுகளின் சுடுகிற தொனியானது தேவதைகளும் அசுரர்களும்சண்டைசெய்துக்கொண்டிருக்கும் பொழுது த்வனிக்கும் யுத்தகோஷத்தையும் சூசிப்பித்துக் காட்டுகிறது. தேவதைகளுக்கு ஒத்தாசையாக சுப்பிரமணியன் அனுப்பப்பட்டானென்றால் தேவதையாகிய ஸ்தவகுணமானது அசுரனாகிய தமோகுணவிகாரத்தால் மாறுதலையடைந்திருக்கும்பொழுது ஆத்ம வித்தையாகிற சுப்பிரமணியனால் தமோகுணம் நசித்து ஈசுவரானுக்கிரகத்திற்குப் பாத்திரமாகும்படி ஸத்வகுணம் மேலிட்டதென்று அறியத்தக்கது. இப்படியே மற்ற விஷயங்களும்.

[பத்திராதிபர்.]

புள்ளிருக்குவேளூரெனனும் வைத்தீசுவரன் கோவிலிற் செய்த உபந்நியாஸச் சுருக்கம்.

1-வது சிவபரத்துவம்.

சம்பாதி சடாயு என்னும் இருபுட்களானும், இருக்காகிய வேதத்தானும் செவ்வேளாய சுப்பிரமணியக்கடவுளானும், ஊர்

கோளாய சூரியனுனும் அருச்சிக்கப்பட்டமையாற் புள்ளிருக்குவேளூரென்னும் திருநாமத்தைக் காரணமாக அமையப்பெற்ற திவ்வியக்ஷேத்திரத்தின் கண்ணே எழுந்தருளியிருக்கின்ற சிவபிரான் தம்மை மெய்யன்போடு வணங்கும் ஆன்மாக்களை அநாதியே பந்தித்த ஆணவமாகிய மலநோயினின்றும் நீக்கித்தமது திருவடித்தாமரைகளிற் சேர்த்தலாலே வைத்தீசுவரன் என்னும் திருநாமத்தைப் பெற்றனர். இதற்குப் பிரமாணம் தேவாரம். "செடியாய்வுடறீர்ப்பான் றீவினைக்கோர் மருந்தாவான்—புடியாடிக்கடிமைசெய்த புள்ளிருக்குவேளூரைக்—கடியார்ந்த பொழிற்காழி கவுணியன் சம்பந்தன்சொன்—மடியாதுசொல் வல்லார்க்கில்லையாமறு பிறப்பே" திருவிளையாடற்புராணம். "பிரமன்மான் முதலாந்தேவர் பிரளயத்திரவாவண்ணம்—பரமனுற்றோணிபோற்றும் பன்னிருநாமம்பெற்ற—புரமிது" சடாயு சம்பாதிகள் பெரும்பூசைசெய்ய வரமளித்திருநோய் தீர்க்கும் மருந்துறை பதியதாகும். மலத்தாற்கட்டுண்டு கிடக்கும்பொழுது கேவலமாய் ஆன்மாக்களை அதனை நீக்கும்பொருட்டுக் கவலையுடன் சேர்தலாகிய சகலமாகிப் பின்னர் அதினின்றும் நீக்கிச் சுத்தமாகச்செய்து நிரதிசய இன்பத்தைக் கொடுத்தலால் அவ்வைதீஸ்வரப் பிரபுவே பரமபதியாகிய கடவுளென்றறிக.

2-வது சுப்பிரமணிய பரத்துவம்.

சுப்பிரமணியப்பெருமான் இருக்காதியென போலச் சிவபிரானை அருச்சித்து ஏனையவான் மாக்களும் அவ்வாறு புரிந்து மோக்ஷத்தை யடையும்பொருட்டென்றுணர்க. என்னவெனில் தந்தையும், "யோகமுயிர்கட்குதவயோக வுருவானுன்". ஆதலின் தந்தைகுணம் மைந்தர்க்குரிமைபை, சிவபிராணிடத்துள்ள ஆறுகுணங்களுமே சுப்பிரமணியபெருமானுக்கு ஆறுதிருமுகங்களாய் மைந்தன் என்பதாலும், சூரபத்மனுக்கு விசுவரூபங்காட்டியபோது சிவசுப்பிரணிய பெருமானுடைய உட்டிருவடிகளில் வரைகள்யாவும் புறத்திருவடியில் நீத்தமும் திருவிரல்களில் இடியேனும் நாணமீன்களும் கோள்களும் திரப்பாட்டில் சமுத்திரராஜனுகிய வருணனும், குபேரனும் நிருதியும் ஏனையவர்களும் திருக்கணைக்காலிற் ஆரிடர்களும் மணிகளும் இருமுழந்தாளில்வித்தியா

தரர் முதலிய வானவர்களும் திருத்தொடையில் இந்திரன் மைந்தனன சயந்தனும், தொடை மூலத்தில் நடுவனும், காலனும் கடிதடத்தில் அசுரரும், அதன் பக்கத்தில் தேவரனைவரும் இடுப்பில் நாகர்களும் திருக்கோசத்தில் தேவா மிருதமும், திருவுந்தியில் கருப்புடு முயிர்களும், திருமார்பில் கலைகளும், யஞ்ஞோபவீதத்தில் போதமும், திருப்புயங்களில் விஷ்ணுவும், பிரமாவும், திருக்கரவிரல்களில் தெய்வமங்கையர்களும், திருப்பற்களிற் ஐம்பத்தோரக்ஷரர்களும், திருநாவிற் இருபத்தெட்டாகமங்களும் திருவதரத்தில் மனுவிக்ஞைகளும், திருநாசியில் வாயுதேவனும், திருக்கண்டத்தில் இசையுமங்கியும், திருவாயில் வேதமும், திருக்கண்களிற் சோமசூரியர்களும், திருச்செவிகளில் திக்குகளும், திருநுதலில் பிரணவமும், திருமுடியிற் பரமான்மாவும் மபினிற்தோன்றக்காட்டி நிற்றலாலும் ஸ்காந்தத்திற்கூறிய பெருமை முழுமையையும், வகித்தமையாலும், சர்வஞ்ஞத்துவம் முதலிய எண்குணங்களையுடைமையானும், இப்பொழுதுள்ளாரும் அஷ்டாவதான,தசாவதான,சோடசாவதான, சதாவதானங்களுக்கு அப்பெருமானையே உபாசித்தலானும், கலியுகவரதராயிருத்தலானும் பிறவாற்றானும், அச்சிவசுப்பிரணியப்பெருமானே முழுமுதலென்றுணர்க.

இங்ஙனம்,

ஆ. மு வேலாமஸ்கந்தபிள்ளை,

தமிழ்பண்டிதர், இந்துகாலேஜ்,

யாழ்பாணம்.

உ

கர்னல் ஹென்ரி ஸ்டீல் ஆல்காட்.

I. கர்னல் ஹென்ரி ஸ்டீல் ஆல்காட் (Colonel Henry-Steel Olcott) என்பவர் பிரம்மஞ்ஞான சங்கத்தின் ஸ்தாபகர் என்பது உலகத்தினர் யாவர்க்கும் நன்முய்த் தெரிந்த விஷயமே.

அவர் சங்கத்தின் பிரதான ஸ்தானமாயும், அவருக்கு மிக்கப் பிரியமுள்ள இந்துக்கிரகமான சென்னை ஆதியாற்றிலுள்ள கட்டடத்தில் 1907-ஞ பிப்ரவரி மாதம் 17-ந்தேதி காலஞ்சென்றார். அவர் எச். பி. பிளாவட்ஸ்கி (H. P. Blavatsky) அம்மையாரோடு சேர்ந்து மேற்படிசங்கத்தை ஸ்தாபிப்பதற்கு முன்பாகவே அவர் தன் சொந்தப்பிரதேசத்தில் ரொம்பக்கியாதிபெற்றவர்.

II. எச். எஸ், ஆல்காட் என்பவர் ஓர் பழைய ஆங்கிலேய பரிசுத்த குடும்பத்தில் பிறந்து, ஐக்கிய மாகாணங்களில் அநேக தலைமுறை வரையில் வசித்து வந்தவர். அவருடைய பாட்டியார் டட்ச் ஈஸ்டு இந்தியா (Dutch East India) கம்பெனியின் ஆதி மெம்பர்கள் ஒருவர்வம்சத்தில் ஜனித்தவர். அவர் 1832-ஞ ஆகஸ்டுமாதம் 2-ந்தேதியில் நியூஜர்ஸி (New Jersey) யிலுள்ள ஆரெஞ்ஜ் (Orange) நகரில் பிறந்தவர். அவர் தன்னுடைய பால்யப்பருவமாகிய 23-வது வயதிலேயே நீவார்க் (Newark) க்கு அருகாமையில் நவீன விவசாய சம்பந்தமான ஒரு பயிர்ச்சியிலடைந்த ஜயத்தினுல் கிரேக் (Greek) கவர்ன்மெண்டார் ஆதென்ஸ் யூனிவர்ஸிடியில் விவசாய சம்பந்தமான முக்கிய ஒரு உத்தியோகத்திற்கு நியமிக்கப்பட்டார். அவர் அந்தஉத்தியோகத்தை அங்கீகரிக்காமல் நியூஜர்ஸி (New Jersey) யிலுள்ளவெய்ல் (Vail) என்பவரோடு வெஸ்ட் செஸ்டர் (West Chester) விவசாயப் பள்ளிக்கூடத்தை நியூயார்க் (New York) கிலுள்ள வர்னென் (Vernen) மலைக்கருகில் அதே வருஷத்தில் ஸ்தாபனம் செய்தார். அப்பள்ளிக்கூடமானது தற்காலத்தில் ஜனங்களுக்கு விவசாய சம்பந்தமாய் போதிப்பிக்கிற வழியை சூசிப்பித்ததாக எண்ணப்படுகிறது. அவர் சீனு, ஆப்பிரிக்கா, தேசத்திலிருந்து ஐக்கிய மாகாணங்களுக்குப் புதிதாய்க் கொண்டுவரப்பட்ட கரும்பு சாகுபடியில் ரொம்ப சிரத்தை எடுத்துக்கொண்டு வந்தார். பிறகு அது சம்பந்தமாய் ஒரு புஸ்தகம் ஒன்று முதல் முதலில் எழுதின மாத்திரத்தில் ஏழு தடவை அச்சிடும்படி ஏராளமான விற்பனை ஏற்பட்டது. இப்புஸ்தகம் செய்தவுடனே வாஷிங்டன் (Washington) நகரில் விவசாய லாக்காவில் டைரக்டர் (Director) உத்தியோகம் ஒப்புக்கொள்ளும்படிக்கும் பின்னும் பல ஏரா

ளமான சொத்துக்களை பரிபாலனம் செய்யும்படிக்கும் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் அவர் ஒரு விதமான உத்தியோகத்தையும் ஒப்புக்கொள்ளப் பிரியப்படவில்லை.

3. 1858-ம் வருஷத்தில் ஆல்காட் என்பவர் விவசாயத்தைவிருத்திபண்ணவேண்டுமென்ற நோக்கத்துடன் முதல் முதல் ஐரோப்பாவுக்குச் சென்றார். அங்கு அவர் பார்த்த விஷயங்களைப்பற்றி செய்த ரிப்போர்ட்டானது அப்பில்டன் (Appleton) என்பவருடைய அமெரிக்கன்ஸைக் லோபேடியா (Ameri-cau Cyclaepadea) என்னும் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அவர் ரொம்ப புத்திமானாக ஜனங்களால் அங்கீகரிக்கப்பட்டு நியூயார்க் (New York) கிலுள்ள (Tribune) என்ற பத்திரிகைக்கு அதிபராக ஆனார். அப்பொழுது விவசாய சம்பந்தமான இரண்டு புஸ்தகங்கள் எழுதினார்.

4. இதற்குப் பிறகு அமெரிக்காவில் ஒரு யுத்தம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் ஸ்வயேச்சைக்கு ஆசைப்பட்டு வட கரோலினா சைனியங்களோடு தானொருவராக ரிஜஸதர் செய்து கொண்டு ஜனரல் பர்ன்ஸைட் (General Burnside) என்பவரின் கீழாக இருந்து யுத்தம் செய்து வந்தார். பிறகு ஜொரத்தால் அடிபட்டு நியூயார்க் (New York) க்கு போகக்கூடவில்லை. உடம்பு அனுகூலமானவுடன் அவர் யுத்தத்திற்குச் செல்ல சந்நத்தம் செய்துகொண்டிருக்கும்பொழுது அவருடைய அதிசாமார்த்தியத்தையும் தைரியத்தையும் கண்டு நியூயார்க் (New York) கில் ராஜவிரோதமாய் நடந்துகொண்டிருந்த வேறுசில கலகங்களைப் பற்றி விசாரணைசெய்ய நியமிக்கப்பட்டார். அதில் வெகு தைரியத்துடன் நன்றாய் விசாரணைசெய்து அதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் உண்மையை மறைக்கும் வண்ணம் வேண்டிய லஞ்சங்கள் கொடுப்பதாய்ச் சொல்லியும் அதை அங்கிகரிக்கப்பிரியமில்லாமலும் அவர்கள் செய்த பயமுருத்தல்களுக்கு கொஞ்சங்கூட அஞ்சாமலும் நான்கு வருஷம்வரையில் வெகு தொந்திரவுக்குள்பட்டு விசாரணையை செய்து உண்மையைக் கண்டுபிடித்து அதில் கெட்ட குற்றவாளியை 10 வருஷத்திற்கு ஜெயிலுக்கு அனுப்பிதன் கவர்ன்மென்டாரிடம் தக்கமதிப்பை அடைந்தும் இன்னு-

அது சம்பந்தப்பட்ட அநேக உத்தியோகஸ்தர்களிடம் அவரு டைய சிரத்தை, கபடமின்மை, கௌரவம், சாமர்த்தியம், தொட்ட காரியத்தில் வெகு ஊக்கம், முதலிய குணங்கள் உடையவரென்று தக்க மதிப்பை அடைந்திருக்கிறார்.

(5) பிறகு கர்னல் ஆல்காட் என்ற பேரை அடைந்து யுத்த இலாகாவில் ஸ்பெஷல் கமிஷனராக நியமிக்கப்பட்டார். அதற்கு 2 வருஷங்கழித்து வேறு தக்க வேலைகளுக்கு நியமிக்கப்பட்டார். அவைகள் எல்லாவற்றிலும் தக்க பெயரையும், கௌரவத்தையும் சம்பாதித்தார். இவரைத்தான் மகான்களால் பிளாவட்ஸ்கி அம்மையாரோடு சேர்ந்து பிரும்மஞான.சங்கம் ஸ்தாபிக்கும்படி மகான்களால் பொறுக்கி எடுத்தார்கள். அவர் எட்டிஸ்பாரம் (Eddy's Farm) என்ற விடத்தில் முதல் முதல் மாடம் பிளாவட்ஸ்கி அம்மையாரால் கண்டு பிடிக்கப்பட்டார். இருவர்களும் வெகு ஊக்கத்துடன் தங்கள் வந்த காரியத்தை உத்தேசித்து வெகு காலம் சிரத்தையோடு வேலை செய்துவந்தார்கள். ஆனால் பிளாவட்ஸ்கி அம்மையார் 1891 வருஷம் மே மாதம் 8ந் தேதியில் தன்னுடைய ஸ்தூல சரீரத்தை இங்கு விட்டுவிட்டு சூக்ஷும லோகவாஸியானாள்.

(பின்னும் வரும்.)

பத்திராதிபர்.

பிரச்னோத்திரங்கள்.

(210-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

I. (பி) நாம் எவ்வித ஆகாரம் உட்கொள்ளவேண்டும்?

(உ) ஆயசு உற்சாகம் பெலம் ஆரோக்கியம் சுகம் பிரீதி இவைகளை விர்த்தி செய்யப்பட்டதாயும் இரசமுள்ளவும் தைலமுள்ளவும் ஸ்திரமாயுள்ளவும் மனதிற்கினியமானவையாயுள்ள ஆகாரங்கள் சாத்துவிகர்களுக்கு யோக்கியமானதால் அவைகளை நாம் உட்கொள்ளவேண்டும்.

(பா. கீ) அ 17. சு. 8.

II. (பி) எவ்வித ஆகாரங்களை விலக்குதல் நலம்?

(உ) அதிகக்கசப்பு புளிப்பு உப்பு சூடு காரம் வறகூஷி தாகத்தைக்கொடுத்தல் இவைகளுள்ளதாயும் துக்கம் சோகம் ரோகம் இவைகளை யுண்டாக்கத்தக்கவைகளாயுமிருக்கிற ஆகாரங்கள் ராஜஸமானதாலும் நம்மையடிக்கடிப் பிரவிர்த்திகளுக்குத் தூண்டி நம்மை பந்தப்படுத்த ஏதுவுள்ளவைகளாதலால் அவைகளை விலக்குதல் வேண்டும்.

(2) தவிரவும் வெகுநேர முந்தியே சமையல் செய்யப்பட்டதாயும், அசுத்தமுள்ளதாயும், பூஞ்சாளம் பூத்ததாயும் பழசாயுமுள்ள ஆகாரஙகளை அத்தியாவசியம் விலக்கல் வேண்டும்.

(3) மயககத்தைக் கொடுக்கக்கூடிய வஸ்துக்களையும், பிராந்தி சாரயம் கள்ளு முதலிய வெகு கெட்ட வஸ்துக்களையும் விலக்கல் அத்தியாவசியமானது. ஏனென்றால் அவ்வித கெட்ட ஆகாரங்களை நாம் உட்கொள்வதால் சூட்சுமலோகவாஸிகளான வெகு தொந்திரவு செய்யக்கூடிய அநேக பிசாசு பூதங்களுக்கும் மிடம் தருவித்துக்கொள்ளுகிறோம்.

4. புகையிலை அபின் மாம்ஸம் இறைச்சிமுதலிய விஷயங்களையும் மீன் கோழி முட்டை முதலிய ஸகல கெட்டவஸ்துக்களையும் நாம் வர்ச்சித்தே தீரவேண்டும். இல்லாவிடின் ஈசுவரனை யடையவேண்டியவழியில் நமது பிரவர்த்திகள் செல்லாமல் கேவ-

லம் கெட்ட விஷயங்களிற் சென்று வெகு துன்பத்திற் குள்ளாவோம்.

5. பால் தயிர் நெய் காய் கரி முதலியவைகளை உபயோகித்தல் நலம்.

6. வெங்காயம் முள்ளங்கி முதலியவைகளை விலக்கல் அவசியம். மாட்டுச்சாணம் நரசல்முதலிய எருக்களால் விருத்தியாகப்பட்ட ஸகல பதார்த்தங்களையும் உட்கொள்ளக் கூடாது.

தவிற நாம் பசிக்கும்பொழுதும் தாகிக்கும் பொழுதுந்தான் ஆகாரத்தையும் தண்ணீரையும் கிரகிக்கவேண்டும்.

(III) (பி) உட்கொள்ளும் ஆகாரத்தின் அளவு என்ன?

(உ) தனது பூராப்பசிக்கு எவ்வளவு ஆகாரம் வேண்டுமோ அதில் பாதிதான் சாப்பிடவேண்டும். நாலில் ஒருபாகம் ஜலத்தை சாப்பிடவேண்டும். பாக்கி நாலிலொரு பாகம் காலியாய் வாயுசஞ் சாரத்திற்காக விட்டுவிடவேண்டும். அப்பொழுதுதான் ஈசுவரனை யடைவதற்கு சாதகமான யோகங்களை அப்பியஸிக்க சக்தியுள்ளவனாவான். அதிக ஆகாரமும் சாப்பிடக்கூடாது. ஆகாரம் சாப்பிடாமலே பட்டினியாயிருக்கவுங்கூடாது. ரொம்பத்தூக்கமுங் கூடாது. தூங்காமலிருக்கவுங்கூடாது ஆகையால் எவ்விதத்திலும் மிதத்தையே அனுஸரிக்கவேண்டும். நாக்கிற்கு எது ருசியென்று தோன்றுகிறதோ அதையெல்லாம் சம்பாதித்து சாப்பிடவேண்டுமென்று திரியக்கூடாது. அவ்வித ஆசைகளுக்கு அதிக இடங்கொடுக்கக்கூடாது. சரீரத்தை ஸ்திரமாய் வைத்துக்கொள்வதற்கும் யோகாப்பியாஸத்தில்திருப்புவதற்கும் ஆகாரம் ரொம்ப முக்கியமாதலால் அதை வெகு ஜாக்கிரதையாய்த்தெரிந்து கொண்டு சரீரபலத்தையும் புத்திக்கூர்மையையும் கொடுக்கக்கூடியபடிக்கு மிதமாய் நாம் சாப்பிடவேண்டும்.

IV (பி) அசுத்த ஆகாரங்களை உட்கொள்ளுவதால் என்ன கெடுதி சம்பவிக்கிறது?

(உ) கெட்ட ஆகாரத்தை உட்கொள்ளுவதால் ஒருவனது ஸ்தூல சரீரம் கெட்ட அணுக்களால் விர்த்தியடைந்தும் அதன் பயனாகவே இச்சைகள் எண்ணங்கள் ரொம்பக்கெட்டும் அஞ்ஞானம் ரொம்ப விர்த்தியாகியும் ஈசுவரனையடையக்கூடாத வண்ணம் மனம் கெட்டுப்போய் விடுகிறது. ரொம்ப கஷ்டங்களுக்கும் துக்கங்களுக்கும் உள்ளாக்கிக்கொள்ளுவான். ஆகையால் வெகு ஜாக்கிறதையாய் ஸாத்வீக ஆகாரத்தையே உட்கொள்ளுதல் அவசியம்.

(ப—ர்.)

நமது பத்திரிகை.

கனவான்களே!

நமது பத்திரிகை ஜனனமாய் 1907-ஆு ஜூன் மாததத்தோடு ஒரு வருஷம் பூர்த்தியாயிற்று. இதுவரையில் கர்ப்பத்தில் வசித்துக்கொண்டு அநேக சங்கடங்களை யனுபவித்தும் ஜனனமானதுமுதல் வெகு ஜாக்கிரதையுடன் பாதுகாக்கப்பட்டுங்கூட அநேக தொந்தரவுக்குள்ளாகியும் ஆனால் பந்துக்களாலும் சிநேகிதர்களாலும் ஸதா இரட்சிக்கப்பட்டுவரும் குழந்தையானது கிரமேண தவிழ்ந்து பிறகு நடக்க எத்தனித்து உடனே பூமியில் விழுவதும் பிறகு எழுந்திருப்பதும் பிறகு நடப்பதும் இவ்வாறு பழகிப்பழகி ஸ்திரமாய் நிற்பதுபோல், இப்பத்திரிகையும் அவ்விதஸ்திதிகளிலிருந்து இப்பொழுது நிற்கும்படியான நிலைமையில் வந்திருக்கின்றது. இனி அது நன்றாய் விர்த்தியாய் நல்ல யௌவன ஸதிதிக்கு வரவேண்டியிருக்கிறது. மேன்மேல் அபிவிருத்தியாய் தக்க ஸ்திதியிலிருக்கும்படி ஏற்படுத்துவது மகான்களுடைய கடமையைத்தவிற, நம்முடையதாய் ஒன்றையுங் காணோம். ஆனால் ஈசுவரார்ப்பண புத்தியாய் வேலையைச் செய்வது மாத்திரம் நம்முடைய முக்கிய கடமையாகும். நமக்கிருந்த லௌகிகத்தைச் சிறிதுகாலம் விட்டு விலகி இப்பத்திரிகையை வெளிப்படுத்தவேண்டுமென்று வெகு ஆவலுடன் வெகு நாளாய் பிரயத்தனப்பட்டு வந்த நாம் ஈசுவரானுககிரகத்தை முன்னிட்டும் சில தக்க கனவான்களுடைய பிரேரேபணையின்பேரிலும் இதை வெளிக்கொண்டுவர நோக்கினோம். எந்தப் பிரவிர்த்திக்கும் இவ்வுலகத்தில் தனம் முக்கியம் அவசியமாதலால் அந்த கனவான்களுடைய உதவியைக்கொண்டும் பின்னும் அநேக கனவான்களுடைய உதவியைக்கொண்டும் நடத்துவதாய் உத்தேசிக்கப்பட்டது. பிறகு அநேக கனவான்களிடம் சென்று சில வருஷங்கள்வரையில் அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே உதவி புரிந்து வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டோம். அவர்களும் அதற்கிணங்கி கையொப்பமிட்டார்கள். சிலர்கள் பூருத்தொகையைக்கொடுத்தும் சிலர்கள் பாதிகொடுத்து முபகரித்தார்கள். சிலர்கள் தங்கள் வாக்கை பூர்த்திசெய்ய உத்தேசித்திருப்

பதாய்த் தெரியவில்லை. விபாங்கள் பிந்திவரும். வருஷமாரம் பித்துக் குழந்தை மழலைச்சொல் பேசி பெற்றோர்களும் பந்துக களும் மற்றுமுள்ளோர்களும் சந்தோஷிக்கும்படி செய்யவேண் டியகாலத்தில் அஜாக்கிரதையாய் கவனிக்காதிருந்தால் குழந்தை இளைத்து அநேக சங்கடங்களை யனுபவிக்க நேருமல்லவா? அப் படிக்கன்றியில் காப்பாற்றவேண்டியது நம்முடைய கடமையன் றோ? ஆதரணை கர்த்தாக்களே! நீங்கள் தக்கவர்களென்றும் சமயங்களிலுபகாரஞ்செய்வீர்களென்றும் நாம் நம்பியிருந்தபடி இந் தவருஷத்திலாவது சென்ற வருஷத்து பாக்கித் தொகையையும் இந்த வருடத்திற்குச் சேரவேண்டிய தொகையையுங் கொடுத்து உதவுவீர்களானால் எவ்வளவோ சௌகரியமாயிருக்கும். நீங் கள் கையெழுத்துமாத்திரம் போட்டால் போதுமா? சமயங்க ளில் உபகரித்தாலல்லவோ நலமாயிருக்கும். சற்று கவனியுங்கள்! கவனியுங்கள்! சந்தாதாரர்களே! நீங்கள் பத்திரிகை சாதாரண காலங்களில் பெற்றுக்கொண்டு வி. பி. யனுப்புங்காலத்தில் மௌ னம் சாதித்துவிடுகிறீர்கள். அல்லது மறுதளிக்கப்பட்டது என் றும் "உத்திரவன்றியில் அனுப்பப்பட்டது ஆகையால் தேவை யில்லை என்றும்" திருப்பிவிடுகிறீர்கள். உங்களை மதித்து தக்க வர்களென்றல்லவோ அனுப்பிவந்தோம். நீங்கள் அநார்பர்க ளாயும்அந்தஸ்திற்குத் தக்கபடிநடவாமல் அற்பபுத்தியை யவலம் பித்துகொண்டு மறுதளித்தீர்கள். நமக்கு செலவன்றியில் பத் திரிகை வெளிவரக்கூடவல்லையே. நீங்கள் பத்திரிகையை பெற் றுக்கொண்டவரையில் பணமனுப்பவேண்டுமென்றுகூட என் உங் களுக்குத் தோன்றவில்லை. எவ்வளவோ விஷயங்களில் விருதா வாய் செலவழிக்கிற உங்களுக்கு இதற்குமாத்திரம் பணம் அகப் படவில்லையா? அப்படியுள்ளபடி யகப்படாமலிருந்தால் சொல் லுங்கள். இனுமாகவாவது நாம் உங்களுககு பத்திரிகை அனுப்பு கிறோம். இனியாவது நீங்கள் அப்படிக்கில்லாமல். நாம் கைக் கொண்ட இந்த வேலை ஸ்திரமாய் நடககும்பொருட்டு உங்கள் இவ்வருடத்திய சந்தாவை முன்பணமாகச் செலுத்தியும் சென் ற வருஷத்திய பாக்கிச் சந்தாவை உடனே செலுத்துவீர்களெ ன்றும் நம்புகிறோம்- நமது பத்திரிகை ஸ்திரமாய் நடத்துவர வேண்டியதின்பொருட்டும் குறிப்பிட்ட காலங்களில் வெளிவர

வேண்டியதின்பொருட்டும் ஒரு முத்திரா சாலை 4. 5 மாதத்திற்குள் ஸ்தாபிக்கவேண்டுமென்று முத்தேசித்திருக்கிறோம். நாம் கைக்கொண்ட இப்பெருங்காரியத்தை யாவர்க்ளும் பூர்த்திசெய்துவைக்கவேண்டுமென்று நாம் கோறுகிறபடியால் தக்கவர்கள் முக்கிய அபிமானிகளாயிருந்து தக்க பொருளுதவி செய்யவேண்டும். சந்தாதாரர்கள் அவர்கள் சந்தாவையும் விரைவிலனுப்பியுதவிசெய்யக் கோரப்படுகிறார்கள்.

(பத்திராதிபர்.)

சயாசாரக் குறிபபுகள்.

பிரம்மஞ்ஞான சங்கத்தில் காலியாயிருந்த பிரஸிடெண்டு ஸ்தானத்திற்கு மாதுஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையாரை பூலோகத்திலுள்ள சகல கிளைச் சங்கங்களின் மெம்பர்களில் பெரும்பான்மையோர் பொருக்கியெடுத்திருக்கிறார்கள். இது சகலரும் ஸந்தோஷிக்கத்தக்கதே. ஷை அம்மையவர்கள் இங்கிலாந்தில் அநேக விடங்களில் உபந்யாசம் செய்து வருகிறார்கள் ஈசுவரன் தக்கபலத்தையும் பூர்ணயுஸையும் அம்மாளுக்குக் கொடுத்தருள்வாராக.

சிருங்கேரி ஸ்ரீமத் சங்கராசாரியார் சுவாமியவர்கள் கோபிசெட்டிப்பாளையம் வந்து வியாஸ பூஜையு மங்கு செய்தார்கள்.

கும்பகோணம் ஸ்ரீமத் சங்கரா சாரியாரவர்கள் இறந்து போன ஊரில் சமாது முதலிய தொன்றுமேற்படுத்த மடத்திலுள்ளவர்கள் பிரயத்தனஞ் செய்யாமலிருப்பதைக் கேள்விப்பட வெகு வருத்தத்திற் கிடமாகிறது. மடத்துசொத்தைப் பிடுங்கித் திங்கத்தயாராய்க் கூடியிருக்குங் கூட்டங்கள் ஏன் கவனிக்கவில்லையோ?

ஆதரணை கர்த்தாக்களுக்கும் சந்தாதாரர்களுக்கும் ஓர் விண்ணப்பம்.

முதல் வருஷத்தில் நமக்கு நேரிட்ட விசேஷ பொருட் செலவாலும் சந்தாதாரர்களில் அநேகர்கள் பத்திரிகையை வி. பி. யிலனுப்பிய காலங்க

களில் பெற்றுக் கொள்ளாததினுல் ஏற்பட்ட நஷ்டத்தாலும் நமக்கு ரொம் அசௌகரியமா யிருக்கிறபடியால், ஆதரணை கர்த்தாக்கள் தாங்கள் செலு த்துவதாக வாக்களித்த தொகையை இந்த வருஷத்தில் விரைவிலனுப் பும்படிக்கும் சென்ற வருஷத்தில் பாக்கி வைத்துக்கொண்டிருக்கிற ஆத ரணை கர்த்தாக்கள் அந்த பாக்கியையும் இந்த ஷூ த்திய தொகையையும் சீக்கிரத்திலனுப்பும்படிக்கும் கோறப்படுகிருர்கள்.

சந்தாதார்கள் தாங்கள் சென்ற ஷூ த்தில் செலுத்த வேண்டிய சந்தாத்தொகையையும் இந்த ஷூ த்திய சந்தாத் தெகையையும் உடனே அனுப்பிவரக் கோறப்படுகிருர்கள். அப்படி அனுப்பாதவர்களுக்குப் பத்திரிகை அக்டோபர் மூ த்தில் வி. பி. யிலனுப்பப் படுமாதலால் அதைப் பெற்றுக் கொண்டு பத்திரிகையை யாதரிக்கக் கோறப்படுகிருர் கள். ரொம்ப சொற்பச் சந்தாவாகிய ரூ 1—8-ஐக் கொடுத்து இந்த நல்ல விஷயத்தில் ஆதரிக்க முன் வாரதவர்கள் வேறு எந்த பிரவர்த்திகளுக்கும் அனுகூலிகளாயிருக்க மாட்டார்கள். நமது நாடு க்ஷேமத்தை யடைவ தும் துர்லபம். இதை நன்குணர்ந்து யாவர்களும் தங்கள் தங்கள் தொகையை விரைவில் அனுப்பிவரக் கோறப்படுகிருர்கள். ஒவ்வொரு சந் தாதாரரும் குறைந்தது 2 புதிய சந்தா தாரர்களைச் சேகரிக்க முயற்ச்சி செய்யும்படி கோறப்படுகிறது.

பத்திரிகையின் காலதாமதமேன்? மன்னிப்பு!

நமது பத்திரிகையை குறித்த டயத்தில் வெளிக் கொண்டு வரவே ண்டுமென்று நாம் ரொம்ப முயற்ச்சித்தும் அச்சிடுவது பாரதினமாயிருப் பதால் அவ்வாறு செய்யக் கூடவில்லை. அச்சாபீஸர்கள் தஞ்சாவூர் கலெக் டர் ஆபீஸ் பட்ஜட் வேலைத் தொந்தரவாலும் வேறு ஜாஸ்தியான வேலைத் தொந்தரவாலும் நமது பத்திரிகை வேலையை ஜூலை ஆகஸ்டு மாதங்களில் தொடாமலிருந்துவிட்டபடியால் நாம் செப்டம்பர் 10௳ முதல் 23௳ வரை யில் அச்சாபீசில் தங்கி வேலை முடித்து வரவேண்டியதாயிருந்தது. சொந்த முத்திராசாலை யில்லாமலிருக்கும் நிர்பந்தம் இப்பொழுது நன்ருய்த்தெரிய வருகிறது. ஆதரணை கர்த்தாக்களும், சந்தாதாரர்களும் தங்கள் கடமையையு ம் நன்ருய் உணருகிறதில்லை. அதுவும் 2வது காரணம்:— அச்சாபீஸர்கள் இனிபிரதிமாதமும் தவருமல் பத்திரிகையையனுப்பி விடுவதாக வாக்களித் திருக்கிருர்கள். இனி தவறமல் அந்தந்த மூத்திய பத்திரிகை அடுத்த மூ 10௳ க்குள்ளாவது அல்லது அதே மாதங்களில் கிடைக் குமாதலால் சந்தாதார்கள் தயவு செய்து காலதாமதத்திற்காக மன்னி த்தும் பத்திரிகைக்கு முன்பணம் அனுப்பிப் பத்திரிகையை யாதரிக்கக் கோறப்படுகிறர்கள்.

சீக்கிரத்தில் முத்திராசாலை ஸ்தாபிக்க அபிப்பிராய மிருப்பதால், ஆதிரணைகர்த்தாக்கள், சந்தாதார்கள் தங்களால் இயன்றவளவு சாதகத்தைச் செய்தால் வெகு சிலாக்கியமாயிருக்கும். பழய பாக்கியில்லாமல் வைத்துக்கொள்ளுதல் ரொம்ப சிலாக்கியமாகும். சக்தியுள்ளவர்கள் மூன்று ஷூத்ய சந்தாவையாவது முன் பணமாக அனுப்பினுல் முத்திராசாலை வாங்க ஓர் ஸாதகமாகும். இப்படி 500 பேர்கள் செலுத்தினுல் போதும்.

ஆனிமீ 30உயில் சிதம்பரம் ஸ்ரீ நடராஜா க்ஷேத்திரத்தில் தண்ணீர்க்குண்ணம் மகாா-ா-ஸ்ரீ சிங்காரவேலுடையாரவர்களுக்கு நடந்த ஷஷ்டியப்த பூர்த்தி கல்லியாணத்தில் நடராஜாவுக்கு அபிஷேகத்திற் குபயோகப்படும்படி ரூ 600 பொறுமான வெள்ளி பீடம் ஸமர்ப்பிக்கப்பட்டது. பிராமணுள் முதற்கொண்டு ஸகல வருணத்தாருக்கும் சுமார் 2 00 பேர் வரையில் போஜனமு மளிக்கப்பட்டது. சக்கரைப் பொங்கல் பாவாடை பூராதிட்டமாய்ப் போடப்பட்டது. கோதானம் பூதானம் முதலிய அநேக தானங்கள் வழங்கப் பட்டன. ஸகலப் பிராமணர்களுக்கும் பூரியும் சொடுக்கப்பட்டது. கும்பகோணம் ஸ்ரீ நரசிம்ம பாகவதரவர்கள் மார்க்கண்டேய சரித்திரத்தைப் பற்றியோர் உபாக்கியானம் செய்தார்கள். பிறகு பிரம்மஞ் ஞான பத்திராதிபராகிய எ. ராமய்யரவர்கள் பக்தியைப் பற்றியும் மார்க்கண்டேய சரித்திரத்தின் ஸாராம்சத்தையும் பற்றி எடுத்துப் பேசினுர்கள். சுமார் 600 பேர் வரையில் கூடியிருந்தார்கள். ரொம்ப விதரணையாயும் சிரத்தையுடன் ஈசுவரார்ப்பணமாக மேற்படி ஒடையாரவர்கள் செய்த அநேக நல்ல காரியங்களின் பலனுக ஸ்ரீ நடராஜா அவர்களுக்கு மார்க்கண்டேயரைப் போல சிறஞ்சீவிப்பட்டத்தைக் கொடுத்து அருள் புரிவாராக.

P. K. வர்மா திருவாரூர் ரீடிங் ரூமில் உபந்நியாஸஞ் செய்தார்கள். அதில் கிறிஸ்து மதத்தைப் பற்றிக் செய்த உபந்நியாஸத்தை காசியிலிருந்து கிறிஸ்துவ மதத்தைப் பற்றியுபந்நியாஸஞ் செய்து வந்த ஜான்ஸன் துரை என் கேட்கவில்லையோ? கிறிஸ்துவ மதமே சிலாக்கியம், அதுவே அநாதி, என்றுப் பிதற்றிக்கொண்டிருக்கும் மேற்படி துரை வர்மாவின் உபந்நியாசத்தைக் கேட்பது நலம்.

புத்தக வரவு:— சிதம்பரம் ஆனந்த பரமேசுவர தீட்சதர் அவர்களால் "புருஷார்த்தப் பிரபோதம்" என்ற ஒரு கிரந்தமானது நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அது கிரந்தாட்சரத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. 312 பக்கங்ளடங்கியது. அதில் இஷ்ட தேவதா நமஸ்கார ரூப மங்களாசரணம், சுத்த வைதீக தர்மலட்சணம், தந்திராதிகாரி நிர்ணயம், சாண்டில்ய

சரித்திரம், சிவமூர்த்திஸ்வரூபம், மூர்த்தியான விசேஷம், சிவக்ஷேத்திர மாஹாத்மியம் முதலிய அநேக பரமேசுவர சம்பந்தமான நல்ல விஷயங்க ளடங்கியிருக்கின்றன. சிவ பக்தர்களுக்கு அவசியம் வேண்டியது. இதன் விலை ரூ ஒன்று.

திருவாரூர் T. S. வெங்கட்டராமய்யர் அவர்களால் "சோமாஜி நாய னர்" சரித்திரம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. எளிய தமிழ் நடை யிலெழுதப்பட்டுள்ளது. பக்தர் சரித்திரமாதலால் பக்தர்களுக்கு அவசியம் வேண்டியது. விலை அணு ஒன்று.

இப்பொழுது தர்மபுரத்தில் பண்டார ஸன்னதியாய் விளங்கப்பட்ட வர்கள் பட்டத்திற்கு வந்தது முதல் நாளது வரையில் ஏராளமாய் கடன் வாங்கி யிருக்கிறார்களெனத் தெரியவருகிறது.

அனேக ஆலயங்களும் அவைகளுக்கு ஏராளமான வரும்படிகளுமிருக் கும்போது எவ்விதம் கடன் உண்டாயிற்றோ தெரியவில்லை. உசிதமான நல்ல செலவுகள் எவ்வளவு, தர்பார் செலவுகள் எவ்வளவு, என்பதை தீர்க் கமாய் விசாரித்தால் விளங்கும். தர்பார் செலவுகளும் வியாச்சிய செலவு களிலும் நல்ல செலவுகளிலுமே கணக்கிடப் பட்டிருப்பது மடங்களின் வழக்கமென்று கேள்வி. சென்னை தர்ம ரட்சண சபையார் இதை கவனிக்க வேண்டியது அவசியமே.

திருப்பட்டனந்தாளில் ஓர் தர்ம ஆஸ்பத்திரி வெகு புத்திசாலித்தனத் துடன் கும்பகோணம் அஸிஸ்டெண்டு கலெக்டரால் ஸ்தாபிக்கப்பட்டது வெகுசிலாக்கியமே. பண்டாரஸன்னதி யவர்கள் வீண் செலவுகளை யெல் லாம் ஒடுக்கி நல்ல செலவுகளில் அவைகளை விர்த்திசெய்தால் மடங்க ளுக்கு வெகு சிறப்பாகும். வைத்தியர்களின் அவசியத்தை இவர் நன் குணர்ந்து தனது ஊரில் ஆஸ்பத்திரி ஸ்தாபித்துக்கொண்டது ஓர் புதுமை.

ஆதரணைக்கர்த்தாக்கள் தங்கள் தொகையை விரைவிலனுப்பியுதவி புரிய க்கோரப்படுகிறார்கள். வெகுகாலம் பெற்றுக்கொண்டு வி. பி. போனவுடன் அநேகர்கள் பெற்றுக்கொள்ளாத காரணத்தைக்கொண்டு 2-வது ஸஞ்சிகை அக்டோபர் மூ த்திய 4-வது ஸஞ்சிகையை வி. பி. யலனுப்புவதாய் உத் தேசித்திருக்கிறது. யாவரும் பெற்றுக்கொண்டு ஆதரிக்கக்கோறப்படுகிறார் கள். இஷ்டமில்லாதவர்கள் உடனே அது விபாத்திற்கு தெரிவிக்ககோற ப்படுகிறார்கள். பத்திரிகையை உடனே வாப்சுசெய்யவேண்டும். வருஷக்க டைசியில் சந்தா செலுத்த இஷ்டமுள்ளவர்களுக்கு வருடச்சந்தா ரூ 2.

அட்வான்ஸாய் செலுத்தப்பட்டவர்களுக்கு ரூ 1—8. அவர்களுக்கு ஒரு படம் இனுமாயனுப்பப்படும்.

தர்ம ரக்ஷண சபை.

1907-ளு பிப்ரவரி மீ 7 உ ஸ்தாபிக்கப்பெற்றது. ஷை வருஷம் மார்ச்சு மீ 5உயில் 1860-ம் வருஷத்திய 21-ம் இந்தியாகவர்மெண்டு சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

யாதஸ்து விபரம்.

1. இச்சபையின் பெயர் தர்மரக்ஷண சபை

2. இச்சபையை ஏற்படுத்தியதின் கருத்துகளாவன:—

(*a*) ஹிந்து மதசம்பந்தமான தேவஸ்தானங்கள், கட்டளைகள், மடங்கள், சத்திரங்கள், மற்றுமுள்ள ஹிந்து சம்பந்தமானவும் அல்லது பொதுவாய் தர்மத்துக்குரித்தான இதர ஆதீனங்களுடையவும் சொத்துகளைப்பாதுகாத்தலும் அவைகளை அபிவிருத்தி செய்தலும்.

(*b*) மேற்கண்ட தர்மங்களுக்கு ஏற்பட்டுள்ள சொத்துக்களையும் திரவியங்களையும் அந்தந்ததர்மங்களின் பிரயோஜனத்திற்காக வினியோகித்து வரும்படியாய் செய்விததலும்.

(*c*) அந்தந்த தர்மங்களின் நோக்கங்களுக்கு விரோதமின்றி வேறு ஹிந்துமத சம்பந்தமான இதர தர்மகாரியங்களுக்கு முன்குறித்த தர்மங்களுக்கு ஏற்பட்ட பணங்களை உபயோகமாகும்படி செய்வித்தலும்.

(*d*) ஹிந்துமதம், தத்வசாஸ்திரம், தர்மசாஸ்திரம், முதலானவைகளை அபிவிருத்திசெய்தலும்.

(*e*) ஹிந்துமதப் பொதுவான தர்மங்களையும் அவைகள் சம்பந்தமான ஆலயங்களையும் மேல்பார்த்தலும்.

(*f*) மேற்கண்ட தர்மங்களையும், ஆலயங்களையும், அவைகளின் கருத்துக்களையும் கொண்டுசெலுத்த ஏற்பட்டுள்ளசட்டங்களில் அனுகூலமானவும் அவசியமானவுமான மாறுதல்களை உண்டுபெண்ணுவித்துக்கொள்ளுதலும்.

(*g*) மேலும் மேற்கண்ட கருத்துகள் நேர்மையாய் நடைபெறும்படியாய் அவசியமான மற்றகாரியங்களை செய்வித்தல் முதலியனவுமாம்.

3. இச்சபையின் முதல் முதலில் ஏற்படும் அங்கத்தின மேல்விசாரணை கர்த்தர்களின் பெயரும், விலாசமும் உத்தியோகமும் அடியில் விவரித்துள்ளன.

பிரசிடேண்டு.

1. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர். B. A. B L. ஹைகோர்ட்டு வக்கீல். [சென்னை

2. ப. நாராயணய்யர். B A. B L. மிருசுதார். மதுரை } சிக்ரடேரிகள்.
3. K. நாராயணஸ்வாமி அய்யர், பிர்மஞான சங்கம். }

4. P R. சுந்தரமய்யர், B. A B. L. ஹைகோர்ட்டு வக்கீல் சென்னை.

5. திவான் பகதூர் K. கிருஷ்ணஸ்வாமிராவ், C. I. E. சென்னை.

6. L. A. கோவிந்தராகவய்யர். B. A. B. L. ஹைகோர்ட்டு வக்கீல், செ[ன்னை

7. S R. M C T. சிதம்பரம் செட்டியார், வியாபாரம் கானுடுகோத்தான்.

8. N. சுப்பராவ், B. A. B. L. ஹைகோர்ட்டு வக்கீல். ருஜமஹேந்திர[புரம்.

9. K. S. சீனிவாச பிள்ளை, வக்கீல் தஞ்சாவூர்.

10. V. C. சேஷாசாரியார் B. A B. L. ஹைகோர்ட்டு வககீல், சென்னை.

(பின்னும் வரும்.)

சந்தாவரவு.

அடியிற்கண்டவர்களிடமிருந்து மே சூன் மீ ங்களில் சந்தாவை வந்தனத்துடன் பேற்றுக்கொண்டோம்.

பெயர்		ஊர்	ரூ. அ
MR. M. பத்மனுபன்	அவர்கள்	போர்ட் பிலேர்	1—8
,, U. முனிவெங்கிட்டரமண செட்டியார்	,,	எத்தாப்பூர்	1—2
,, பொட்டிக்காடு ராமசாமி நாயிடு.	,,	சேலம்	1—8
,, K. V. P. மீனுட்சி சுந்தரம் பிள்ளை.	,,	பொள்ளாச்சி,	1—2
,, மாதவருவ்.	,,	ஷை	1—8
,, அண்ணுப்பிள்ளை.	,,	ஏனங்குடி,	1—8
,, A. R கோவிந்தசாமி நாயிடு.	,,	ஏனங்குடி	1—8
,, குப்புஸாமிய்யர்.	,,	திருவாலூர்	1—0
,, வாஸவாய்யர்.	,,	தென்மருதூர்	1—8

,,	கஸ்தூரி ரெங்கய்யங்கார்	,,	நீடாமங்கலம்.	1—2
,,	ராஜூமுதலியார்	,,	குருக்கத்தி	1—8
,,	V. C. சேஷ அய்யங்கார்	,,	கும்பகோணம்.	1—2
,,	S. காஞ்சிநாத அய்யர்	,,	கும்பகோணம்.	1—8
,,	குஞ்சிதபாதமய்யர்	,,	நாகப்பட்டணம்,	1—8
,,	K, S. வெங்கிட்டராமய்யர்	,,	ஷை	1—8
,,	N, S நாராயணசாமிய்யர்	,,	விருத்தாசலம்	1—2
,,	N. முத்துசாமி கௌண்டர்	,,	வேட்டைக்காரன் புத்தூர்.	1—2
,,	T. K. R. C. T. சிதம்பரம் செட்டியார்		வைத்தீஸ்வரன் கோவில்.	1—8
,,	இராமச்சந்திர நாயக்கர்	,,	பாலக்குருச்சி	1—2
,,	T. கோவிந்தரூவ்	,,	கங்கணம்புத்தூர்	1—2
,,	பஞ்சனதம்பிள்ளை	,,	மன்னார்குடி	1—2
,,	சேவுப்பிள்ளை	,,	ஷை	1—2
,,	ராமச்சந்திரய்யர்	,,	ஷை	1—8
,,	பாலகிருஷ்ணய்யர்	,,	ஷை	1—8
,,	தியாகராஜய்யர்	,,	ஷை	1—8
,,	R. சப்பிரமணியய்யர்	,,	ஷை	1—8
,,	L. வெங்கடேசய்யர்	,,	ஷை	1—8
,,	அய்யாசாமிய்யர்	,,	ஷை	1—8
,,	சடகோபமுதலியார்	,,	ஷை	1—8
,,	தசரதராமய்யர்	,,	ஷை	1—8
,,	அப்பர் சுந்திரமுதலியார்	,,	ஷை	1—8
,,	பார்த்தசாரதிநாயடு	,,	ஷை	1—8
,,	வெங்கிடுசுப்பய்யர்	,,	தஞ்சாவூர்.	1—8
,,	ஸ்ரீனிவாசபிள்ளை	,,	ஷை	1—8
,,	ஷண்முகசுந்தரம்பிள்ளை	,,	ஷை	1—8
,,	K. V. பாலசாமி நாயடு	,,	களப்பனைக்கன்பட்டி	1—8
,,	V. நரசிம்மாசாரியார்	,,	சாலியமங்கலம்	1—8
,,	P. ஷண்முகம் செட்டியார்	,,	முறையூர்	1—8
,,	வன்னி துரைசாமிதேவர்	,,	ராமநாதபுரம்	1—8
,,	L. சுப்பராயமுதலியார்	,,	ஆனைமலை	1—8
,,	S. வெங்கு அய்யர்	,,	முல்லைக்கல்	1—8
,,	T, S. கல்லியாணராமய்யர்	,,	குளித்தலை	1—8

,,	T. K. ராமசாமிய்யர்	,,	திருவாரூர்	1—8
,,	ராதாகிருஷ்ணய்யர்	,,	சாத்தனூர்	1—8
,,	ஈசுவரப்பய்யர்	,,	ஷை	1—8
,,	கிர்ஷணசாமிய்யர்	,,	குறுங்குளம்	1—8
,,	சிதம்பரனாதமுதலியார் (5-Copies)	,,	சீர்காழி	7—8
,,	தியாருஜபிள்ளை	,,	ஷை	1—8
,,	வீராராமமுதலியார்	,,	ஆர்ணி	1—8
,,	முத்துகிர்ஷ்ணய்யர் (3 Copies)	,,	திருச்சிறுப்பள்ளி	4—8
,,	C. K. பெருமாள்செட்டியார்	,,	திருவாரூர்	1—0
:,	சுப்பய்யர்	,,	பழயவலம்	5—0

(ப—ர்,)

மாற்றுப் பத்திரிகைகள்.

தியாஸபிஸ்ட் இந்து சாதனம் (Jaffna) சுதேச மித்திரன், கோவைகலாநிதி, சக்ரவர்தனி, மாதர்மனோரஞ்சனி, Souh Iudaia Mail, விஜயவிகிடன், ஆர்யமித்திரன், தஞ்சை ஜனநேசன், சமஸ்கிருத பத்திரிகை (புதுக்கோட்டை) P. H Shool மாக்ஸின்) ஆத்மபோதினி (யாழ்ப்பாணம்) நீலலோசனி (நாகை) ஜனனுகூலன் (தஞ்சை) முதலிய பத்திரிகைகளை வந்தனத்தோடு பெற்றுக்கொண்டோம்.

ஏஜண்டுகள் தேவை!

நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், பணம் வசூலிக்கவும் ஏஜண்டுகள் தேவை! தக்ககமிஷன் கொடுக்கப்படும். தஞ்சாவூர் திருச்சிறுப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை முதலிய விடங்களில் ஏஜண்டுகளாயிருக்க விரும்புவோர்கள் விபறங்களுக்கு உடனே நேரில் எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

குமாஸ்தா தேவை!

தமிழ், ஸம்ஸ்கிருதம், இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் பழக்கமுள்ளவர்கள் விண்ணப்பம் செய்துகொள்ளலாம். வெளிகளிலும் சென்று வேலை செய்ய ஸாமர்த்தியத்தோடிருப்பவர்கள் வெகு சிலாக்கியம். அவர்கள் புத்திசாலித்தனத்திற்குத் தக்கபடி சம்பளம் கொடுக்கப்படும். குறைந்தது 1, ஷை த்திற்குள் பக்கங்களிற் செல்லக்கூடாது. விபறங்களுக்கு எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

HONORARY PATRONS.

1. மகா-ா-ா-ஸ்ரீ T. N. ராமசந்திரய்யரவர்கள்,
டிரஷரி டிப்டிகலெக்டர். தஞ்சாவூர்.
2. ,, U. S. ராமஸாமி அய்யரவர்கள்,
எக்ஸிகியூடிவ் இஞ்சினீர், நாகபட்டணம்.
3. ,, C. N. சுப்பிரமணிய அய்யரவர்கள்,
(பென்ஷன்) அஸ்ஸடெண்டு இன்ஸ்பெக்டர்,
(of Schools,) மதுரை.
4. ,, P. நாராயண அய்யரவர்கள் B. A. B. L.
ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை.
5. ,, B. S. நடராஜசாஸ்திரியாரவர்கள் B. A. B. L
ஹைகோர்ட்டு வக்கீல், நாகபட்டணம்.

ஆதரணை கர்த்தர்கள்.

வனங்குடி மகா-ா-ா-ஸ்ரீ V. ராமசந்திரநாயுடு அவர்கள்.
,, ,, S. சீனிவாஸநாயுடு அவர்கள்.
தண்ணீர்க்குளம் ,, T. S. சிங்காரவேலுஉடையாரவர்கள்.
திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பண்டார ஸன்னதியவர்கள்.
குன்னியூர் மகா-ா-ா-ஸ்ரீ ஸாம்பசிவய்யரவர்கள்.
சீர்காழி ,, த. மு. முத்துசாமிசெட்டியாரவர்கள்.
உக்கடை ,, அண்ணாசாமித்தேவரவர்கள்.
கூடலூர் ,, தில்லைநாயகம்பிள்ளை யவர்கள், பென்ஷன் டிப்டி கலெக்டர்,
திருப்புகலூர் ,, அஜபா நடேசுவர பண்டார ஸன்னதியார் அவர்கள்.
ஒகைப்பேரையூர் ,, வயித்தியநாதஸாமிய்யரவர்கள்.
வடபாதிமங்கலம் ,, V. T. ராமலிங்கமுதலியாரவர்கள்.

பிர்ம்மஞ்ஞானப்பத்திரிகை.

---

1. 1906-ஹு ஜூலை ௴ முதல் திருவாரூரில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இதில் ஹிந்துமததத்துவங்கள், பகவத்கீதைக்கு நூதனதமிழ் மொழிபெயர்ப்புகள் மஹான்களின் சரித்திரங்கள், அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், தியாஸபி,, விவேகானந்தரின் உபந்நியாசங்கள், முதலிய விஷயங்கள் அடங்கியிருக்கும் தவிர, மடங்கள், ஆலயங்கள், தரும சத்திரங்கள் பரிபாலனம் செய்யப்பட்டு வரும் நேர்மை, சீர்குலைவு முதலியவைகளைப் பற்றிய ஸமாச்சாரக் குறிப்புகளும் பின்னும் மதசம்பந்தமான சமாச்சாரங்களும் அடங்கியிருக்கும்.

2. சாமான்ய ஏழைகள் கூட சுலபமாய் வாங்கி வாசித்துப் பயனெய்துமாறு இந்தியாவிற்கு வெகு சொற்பமாகிய வருடச் சந்தா ரூ 1—8-ம் சிங்கப்பூர், மோல்மீன், பினாங்கு முதலிய இடங்களுக்கு ரூ 2—8 ஆக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஹெட்மாஸ்டர் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளும் மாணாக்கர்களுக்கு மாத்திரம் ரூ 1 க்குக் கொடுக்கப்படும். சந்தா அட்வான்ஸாகவே செலுத்தப்படவேண்டும். அப்படி செலுத்துபவர்களுக்கு வருடத்திற்கு ஒரு படம் இனாமாய் அளிக்கப்படும். வருடக் கடைசியில் செலுத்தப் பிரியமுள்ளவர்களுக்கு வருட சந்தா ரூ 2 வீதம் சார்ஜ் செய்யப்படும். சந்தாதார்களாயிருக்க விரும்புவோர்கள் வருஷத் துவக்கமாகிய ஜூலையிலிருந்தாவது அல்லது ஜனவரியிலிருந்தாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். வேறுவிதமாய்ப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது

தனிக்காப்பி கிரயம் அணா 4.

உபந்நியாசங்கள் முதலிவைகள் தெளிவாயும் சேர்த்தியாயும் பிரதி ௴ 20௳க்குள் கிடைத்தாலன்றி அடுத்த ௴த்தில் பிரசுரஞ் செய்யப்படமாட்டாது. நெருக்கமாயுந் தெளிவாயுமிராத உபந்நியாசங்கள் பிரசுரஞ் செய்யப்படமாட்டாது. வாபீசு செய்யப்படவுமாட்டாது. இதில் கையெழுத்துப் போடப்பட்டிருக்கும் உபந்நியாசம் முதலியவைகளுக்குப் பத்திராதிபர் ஜவாப்தாரியல்ல. பத்திரிகை கிடைக்காதவர்கள் ஒரு மாதத்திற்குள் தெரிவித்துக் கொண்டாலொழிய பத்திரிகை மறுபடியுமனுப்பப்படமாட்டாது. அவசியம் வேண்டியதாயிருந்து கைவசமுமிருந்தால் காப்பி 4 அணா வீதம் பெற்றுக்கொண்டு கொடுக்கப்படும். பதில் வேண்டியவர்கள் ரிப்ளை கார்டு அல்லது லேபிள் அனுப்பினால் பதில் அனுப்பப்படும்.

Advertisements for moderate charges.

பிரசுரங்கள் மிதமான சார்ஜுக்குப் போடப்படும்.

Apply to,

ஏ இராமய்யர்,
எடிட்டர் & புரொப்ரைட்டர்,
பிரம்மஞ்ஞான பத்திரிகை, திருவாரூர்.